www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

புரட்டாதி 2001 இதழ் -30

"எங்கட கடலில, ஏரியில
எங்களுக்கு தொழில்
செய்ய விடுறாங்களில்ல.
பாதுகாப்பு
பிரச்சினையென்டா இஞ்ச
ஏன் இருக்குறாங்கள்"
-சனத்தின் குரல்-

# மீண்டும் வெல்வோம்!

வர்த்தக சமூகத்தின் ஏற்பாட்டில் சமாதானத்தை வலியுறுத்தும் "இன்று கைகோர்ப்போம்" நிகழ்வு "தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், கோரிக்கைகள் என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து இனப்பிரச்சனைக்கு அரசு தீர்விற்கு அரசு முன்னுரிமை கொடுக்க வேண்டும்" என பெண்கள் சகோதரத்துவ முன்னணியின் அழுத்தம் விடுதலைப் புலிகளின் தடையை நீக்கி சமஷ்டி முறையில் தீர்க்குமாறு சமாதானத்திற்கான பத்திரிகையாளர் அமைப்பு வலியுறுத்தல் அரசியல் ஸ்திரமின்-



மையால் அபிவிருத்தி பின்னடைவு என ஐக்கியநாடுகள் சபையின் அமைப்பு சுட்டிக்காட்டல்.. என பல்வேறு முனைகளில் இருந்தும் சிறிலங்கா அரசிற்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. இப் போக்கு முன்னெப்போதையும் விட அதிகரித்து வருகின்றது. இருந்தும் சிறிலங்கா அரசு புதிய யுத்த முயற்சிகளைத் தொடக்கியுள்ளது.

புதிய கூட்டு ஒன்றினை வெற்றிகரமாக அமைத்து விட்டதான ஒரு உற்சாகத்தில் சிறிலங்கா அரசு தனது படையினரை மற்றுமொரு பாரிய படைநகர்வின் மூலம் ஒரு பரீட்சார்த்த முயற்சியில் ஈடுபடுத்தப் போகின்றது. கடுமையான பொருளாதார நெருக்கடியுடன், புதிதாக வரட்சி, மின்சார நெருக்கடிகளுக்கு மத்தியில் போர்முனையில் ஒரு பாரிய வெற்றியை பெற்று மக்களை திருப்தி செய்து விடும் நோக்குடன் தனது அழித்தொழிப்பு யுத்தத்தை புதிய வேகத்தில் தொடக்கியுள்ளது. ஆக சிறிலங்கா அரசினதும் சிங்கள இனவாதக் கட்சிகளதும் இருப்பானது யுத்தத்தின் நீடிப்பில் என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சிங்கள மக்களுக்கு ஏராளமான ஜனநாயக உரிமைகள் கிடைக்கப் போகின்றது போன்ற ஒரு சூழலை உருவாக்கி, எதிர்கட்சிகள் பலவற்றின் கவனங்களை தேசியப் பிரச்சனை, தீர்வு முயற்சிகள் போன்றவற்றில் இருந்தும் திருப்பி விட்டுள்ளது. கிடைக்கும் இந்த அவகாசத்தை சமகாலத்தில போர் வெற்றிகளை அடையப் பயன்படுத்திக் கொள்ள முனைந்துள்ளது.

சிறிலங்கா அரசின் யுத்த முனைவுகளில் தமது நீண்டகால நலன் கருதி அமெரிக்க, ஐரோப்பிய அரசுகள் உடன்பாடு கொண்டிருக்கவில்லை என்பதை அறிவோம். யுத்தத்தை நிறுத்துமாறு அண்மைக்காலமாக அவை அரசுக்கு அழுத்தம் கொடுத்தும் வந்தன. தற்போது அவ்வரசுகள் புதிய அழிவு யுத்தமொன்றைப் பிரகடனம் செய்துவிட்டு, உலகெங்கும் அலைந்து ஆள்பிடிக்கத் தொடங்கியிருக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி சந்தி-

(தொடர்ச்சி 9 ல்)

# தென்னாசியாவிலும் ஏகாதிபத்திய இராணுவ விஸ்தரிப்பு

ஆப்கானிய மக்களையும் மேற்காசியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் தனது நச்சுக் கருவிகளால் நசுக்கியளிப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் தென்னாசியாவிற்கும் தனது இராணுவத் தளங்களை விரிவாக்க முனைகிறது. பாகிஸ்தானை நெருக்குகின்றது. அவ்வாறே இந்தியாவையும் அணுகியுள்ளது.

இந்தியா அரசும் தன்னை அமெரிக்கா அரசின் அணியில் இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டு நேட்டோ கூட்டில் அங்கத்துவம் பெறும் நோக்குடன் ஆப்கான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்து வருகிறது. இந்நிலையில் அமெரிக்க, பன்னாட்டு விமானப்படைக்கு தளம் வழங்குவது அல்லது இந்தியாவின் வான் பரப்பை அவற்றின் யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கு இடமளிப்பது யாவுமே தென்னாசியாவை ஏகாதிபத்தியங்கள் தமது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிப்பதாகிடும்.

(தொடர்ச்சி 11ல்)

# அவர்களின் அரசியல் சாசன சபை

அரசியல் சாசன சபை, சுதந்திர ஆணைக்குழுக்கள், 17வது திருத்தம் என்பன முதன்மையான பிரச்சனையா? தமிழ்த் தேசியப்பிரச்சனை என்பது முதன்மையானதா? என்பதில் எதிரும் புதிருமான நிலையை இன்று எதிர்கொண்டுள்ளோம். அரசியல்சாசன சபை, சுதந்திர ஆணைக் குழுக்கள், போன்ற விடயங்களில் சிங்கள தேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மூன்று பெரும் கட்சிகள் மிகத் தெளிவான முறையில் இணக்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. எதிரிகளாக மோதிக் கொள்ளும் இக்கட்சிகள் இவ்வாறாக நெருங்கி வர முடிகின்றதெனின், அவர்களுக்கிடையிலான வேறுபாடுகளுக்கும் மத்தியில் ஒற்றுமைப்படும் புள்ளியாக சிங்கள தேசத்தின் சோவினிச நலன்களை அவை நிறைவு செய்யவதென்பது செயற்படுகிறது.

அவ்வாறாயின் இந்த அரசியல் சதுரங்கத்தில் இதர தேசிய சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் தருவது பற்றி அவர்கள் சிந்தனையில் கூட படாமலிருந்தது வெறும் தற்செயல் அல்ல. ஆக, இந்தக் காரியங்கள் யாவும் அவர்களுக்கானது மட்டுமே என்பதை அவர்கள் கூட்டாக இப்போது மீள் உறுதி செய்துள்ளனர் என்றாகிறது.

நமது போராட்ட வெற்றியின் அழுத்தம் காரணமாக, இன்று அவர்கள் மேற்கொண்டிருக்கும் இந்த அரசியல் காரியங்கள் பரந்துபட்ட சிங்கள மக்களுக்கு குறிப்பிட்ட அளவிற்கேனும் அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பெற்றுத் தரும் எனின், அதனை நாம் ஆதரிப்பது நமது அரசியல் கடமையாகும். மேலும் அந்த மாற்றங்கள் சிங்கள ஆளுங்குழுமத்திற்கு எதிராக ஏதோவகையில் அம்மக்களால் பயன்படுத்தப்படும் என்பது நமக்கு நிச்சயம் நம்பிக்கை உண்டு.

மற்றும்படி, அரசியல்சாசனம் அவர்களுடையது, பாராளுமன்றம் அவர்களுடையது, அரசியல்சாசன சபை, 17ம் திருத்தங்கள் எல்லாமே அவர்களுடையது. இப்படியான ஒன்றுக்குள் நமக்கு இடம் தரவில்லை என்ற நமது தரப்பு ஆதங்கம் காலம் கடந்ததாகும். அதற்கும் நமக்கும் தொடர்பு இல்லை என்பது ஏற்கனவே திடப்பட்டு விட்ட ஒரு விடயம். இந்தக் குழுவிற்குள் நம்மில் ஒருவர் இருவருக்கு இடம் கொடுத்து விட்டால் பெரிதாக ஏதும் நடந்துவிடும் என்ற நம்பிக்கை இன்னமும் நமக்கு உண்டா? இல்லையே. பின் ஏன் அதுபற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டும். நமது திசைவழிதான் தெளிவாக வகுக்கப்பட்டு விட்டது.

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது வெற்றிகள்: அவர்கள் பெறும் பயன்கள்

நமது மக்களின் விட்டுக்கொடாத விடுதலைப் போராட்டம் காரணமாக, சிங்கள தேசத்தின் பல்வேறு சக்திகளும் படிப்படியே குறிப்பிட்டளவிற்கு அரசியல் உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் பெற்று வருகின்றனர். வழிவழியாக அதிகாரங்களை அனுபவித்து வந்த சிங்கள ஆளுங்குழுமத்திடம் இருந்து அதிகாரங்கள் சிங்கள தேசத்தின் இதர சமூகப் பிரிவுகளுக்கும் சென்றடைவதற்கு நமது போராட்டமும் வித்திட்டுள்ளது. ஆயினும் நமது மக்களுக்கு ஒரு சிறிதேனும் உரிமைகள் கிடைத்துவிடக் கூடாது என்பதில் மட்டும் இச்சக்திகள் பிரக்ஜையுடன் செயற்பட்டு வருகின்றமை ஒரு முரண்நகையாக உள்ளது .

ஜேஆர் என்ற தனிமனிதரிடம் குவிந்து கிடந்த அதிகாரங்கள் மாகாண மட்டங்களுக்கு பகிர்ந்து அல்லது பரவாக்கப்படுவதற்கும் சிங்கள தேசத்தின் பல்வேறு இரண்டாம்மட்ட சக்திகள் அதிகாரங்களை அனுபவிக்கவும் வழிவகுத்தது நமது விடுதலைப் போராட்டமே.

சிங்கள மைய அதிகாரக் கட்டமைப்பிற்கும் அதன் ஒற்றையாட்சி அமைப்பு முறைக்கும் எதுவித பாதிப்பும் இன்றி தமிழ் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டதுதான் இந்திய-சிறிலங்கா ஒப்பந்தம். ஆனாலும் அனைத்து மக்களுக்கும் சமத்துவம் பற்றி அக்கறைப் பட்டுக் கொள்ளும் ஜேவிபி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைத்து தீவிரமாக முதலில் எதிர்த்து நின்றது.

இந்த ஒப்பந்தத்தில் தமிழருக்கு எதுவும் கிடையாது. சிங்கள ஆளுங்குழுமத்திற்கு அடுத்தாக உள்ள சக்திகளைத் திருப்திப்படுத்தவும் பகுதியளவில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வழிசெய்யப்பட்டுள்ளது என்பதை இத்திட்டத்தை எதிர்த்த சக்திகள் மிகக்குறுகிய காலத்தில் கண்டு கொண்டன. தமது தோழர்கள் வீதிகளில் உயிர்களை அர்ப்பணித்து எதிர்த்த ஜேவிபியினர், அடுத்தவந்த மாகாணசபைத் தேர்தல்களில் மிக வீச்சாகவே பங்கு கொண்டனர். ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். அதன் பலத்தில் அப்படியே பொதுத்தேர்தலில் பங்கு கொண்டு பத்து ஆசனங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சந்திரிகாவை எடுத்துக் கொள்வோம் முதலில் மேல்மாகாண சபை முதலமைச்சரானார். அதுவே அவரது வளர்ச்சியின் முதற்படியாகும். அதன் பலத்தில் பிரதமரானார். பின்னர் அரசுத்தலைவராகி ஜேவிபி இற்கும் ஒரு வழிகாட்டியாக அமைகின்றார். அது மாத்திரமன்றி மரபாக இருந்து வரும்ஆளும் குழுமத்திற்கு அடுத்தாக சமூகத்திலுள்ள பல சக்திகள் தமக்கென அதிகாரத்தை பெற்றுக் கொள்ள, நமது விடுதலைப் போராட்டத்தின் அழுத்தம் வழிவகுத்துள்ளது. இன்று அவர்கள் மத்தியில் மாகாண சபை முறை என்பது செழித்துக் கிடக்கின்றது. நமது மண்ணிலோ முன்னாள் இராணுவத்தளபதியின் ஆணைக்குக் கீழ் மாகாண சபை அதிகாரம் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது. போராடியது நமது மக்கள் அதன் சாட்டில் பெற்றுக் கொண்டதோ அவர்கள் (சிங்கள தேசம்) என்பதைக் காண்கின்றோம்.

இன்றைய சிங்கள தேச அரசியல் சூழலை எடுத்துக் கொள்வோம். அண்மைக் காலத்தில், வன்னி வெற்றி, ஆனையிறவ வெற்றி, கட்டுநாயக்க விமானப்படைத் தாக்குதல் போன்வற்றின் தோல்விகளால் ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டுள்ளது சிறிலங்கா அரசு. இதன் காரணமாகவே யூஎன்பி ஆகட்டும், ஜேவிபி ஆகட்டும் சந்திரிகா அரசுடன் பேரங்கள் செய்து ஐந்து ஆணைக்குழுக்களைப் பெற்று தமக்கென ஒரு ஜனநாயக சூழலை உருவாக்கும் விதத்தில் அரசை இறங்கி வரச் செய்யக் கூடியதாக இருந்துள்ளது. அவர்களது ஜனநாயகத்தைக் கேலிக்கிடமாக்கியிருக்கும் எதேச்சாதிகாரத் தன்மை கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்புக்கான வாய்ப்புக்களைத் திறந்து விட்டுள்ளதற்கும் காரணம் நமது விடுதலைப் போராட்டத்தின் உக்கிரமும் வெற்றிகளும் கொடுத்த நெருக்கடியே.

ஆழ்ந்து நோக்குவோம் எனின், அரசியல் சமத்துவம், ஜனநாயக உரிமைகள், அரசியல் உரிமைகள் என்பவற்றுக்காகப் விட்டுக் கொடுப்பின்றிப் போராடுகின்றனர் தமிழ் மக்கள். இப்போராட்டத்தின் உக்கிரமும், சிந்தப்படும் இரத்தமும், செலுத்தப்படும் அர்ப்பணிப்புகளும் தவிர்க்க முடியாதவாறு சிங்கள ஆளுங்குழுமத்தின் அதிகாரக் கோட்டைகளைத் காலத்திற்குக் காலம் தகர்க்கின்றது. இதனைத் தவிர்க்கும் வகையில் சிங்கள தலைமை முன்னெடுக்கும் போலி அரசியல் முயற்சிகள் தமிழ்த் தேசியப்பிரச்சனைக்கு எதுவித தீர்வுகளையும் தராது. ஆனால், எமது வெற்றிகளானது, சிங்கள தேசத்தில் அதிகாரம் அற்றிருந்து பல்வேறு பிரிவினருக்கு குறிப்பிட்டளவிற்கு அதிகாரங்களையும் அரசியல் உரிமைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

பரம்பரை பரம்பரையாக ஆண்டு வரும் சிங்கள ஆளுங்குழுமத்தை நமது விடுதலைப் போராட்டத்தின் உக்கிரமானது அவ் ஆளுங்குழுமத்தை வெகுவிரைவில் இத் தீவை விட்டே விரட்டயடிக்கப் போகின்றது. நாங்கள் எமது மண்ணில் சுதந்திக் கொடியை நட்டு எமது இறைமையை உறுதிப்படுத்தும் போது, சிங்கள தேசத்தின் பரந்து பட்ட மக்களும் கூட இதுவரை காலம் தம்மைக் காலடியில் மிதித்து வந்த அதிகாரத்துவத்திடம் இருந்து ஆட்சியதிகாரங்களை தம் கையகப்படுத்தி தமது உண்மையான இறையைமை உத்தரவாதப்படுத்திக் கொள்வர். அப்போது சிங்கள இனவாதத்தின் உண்மைச் சொரூபம் குறித்தும், அது யாருக்குப் பயன்பட்டது என்பதையும் ஓரளவிற்கேனும் சிங்கள மக்கள் உணர்ந்திருப்பர். நிச்சயம் அவர்கள் நமது தேசத்தின் அரசியல் சமத்துவத்தை அப்போது புரிந்து கொள்வர்.

- தருமு

### பதினைந்தாவது ஆண்டு நினைவு

## தோழர் சந்ததியார்

பிறப்பு 30 . 08 . 1951



வீரமரணம் 18 . 9 . 1985

(தம்பிப்பிள்ளை சந்ததியார்)

தோழர் சந்ததியார் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர். தமிழ் இளைஞர் பேரவை, புதிய தமிழ் புலிகள், தமிழீழ விடுதலை புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தீப்பொறி என இவரது அரசியல் வாழ்வு விரிவானது.

தமிழீழ விடுதலை போராட்டத்தில் மக்கள் போராட்டத்திற்கு முன்னுரிமையளித்த மார்க்சியவாதி

தாபன அகவாழ்வில் ஜனநாயகத்திற்காக என்றும் போராடி வந்தவர்

போராட்டத்தின் ஆரம்பந்தொட்டே இந்திய ஆக்கிரமிப்பின் அச்சுறுத்தலை தீர்க்க தரிசனத்துடன் சுட்டிக்காட்டி வந்தவர்

சோசலிச தமிழீழம் எனும் இலட்சியத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்

கழக தலைமையின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்ததனால் உமாமகேஸ்வரன் பிரிவால் படுகொலைக்குள்ளானவர்.

ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் வீரமரணமடைந்த எம்மருந் தோழருக்கு எமது இதய அஞ்சலிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# PA-JVP
# இரசாயன சேர்க்கை

பரபரப்பாக பேசப்பட்ட சிங்கள தேசிய அரசாங்கம் உருப்பெற்று விட்டது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் இதுவரைக்கும் சந்தித்த இனவாதக் கூட்டின் மிக்க உச்சப் பண்பு கொண்டதும், ஓங்கிய இனவாத குணாம்சம் கொண்டதுமான சக்திகளின் இணைவே பொதுசன முன்னணி- மக்கள் விடுதலை முன்னணி **(PA-JVP)** கூட்டரசாங்கமாகும். இனிவரும் காலகட்டத்தின் பிரதான போக்கு இதுவே. இது போன்ற ஒரு கூட்டிணை **(SLFP-JVP)** நாம் 80 களின் இறுதியிலும் கண்டோம்.

இன்று சிங்கள தேசத்தின் இனவாத, மத்திய தர வர்க்க மற்றும் விளிம்பு நிலை மக்கள் பிரிவினரையும் இணைத்த, நகரம் தொடக்கம் கிராமம் வரை உள்ள பரந்துபட்ட பிரிவினரையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற சக்திகள் தமது நலன்களை பொதுவாக்கி இணைத்துள்ளதைக் காண்கின்றோம். இலங்கைத் தொழிலாளர் கொங்கிரஸ், முஸ்லீம் கொங்கிரஸ் போன்ற "சிறுபான்மைக் கட்சிகளை" வெளியேற்றுங்கள். சிறிலங்கா அரசினைப் பலப்படுத்த நாம் முன்வருகின்றோம் என்ற ஜேவிபி இன் பிரகடனம் இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டது. ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரலினை முன்வைத்து இக்கூட்டு செயற்படத் தொடங்கியுள்ளதையும் காண்கின்றோம்.

சந்திரிகா, தனது முன்னோர்கள் தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறைகளுக்குப் பொறுப்பாக இருந்துள்ளதுடன் தமிழ் மக்களை இரண்டாவது பிரசைகளாக நடாத்தியுள்ளார்கள் என்று ஒப்புக்கேனும் ஏற்றுக் கொண்டுள்ளார். ஜேவிபியின் ஆய்வு யாதெனில், சிங்கள, தமிழ், முஸ்லீம் ஆளும் வர்க்கங்கள் செய்த வினைதான் சிங்கள மக்கள் படும் துன்பம் என்பதே. இதைவிட, சுயநிர்ண உரிமை என்பது இந்தக் காலத்துக்குப் பொருந்தாது என்பதும் ஜேவிபி யின் தற்போதைய அரசியற் கோட்பாடாகும்.

கடந்த காலங்களில் இரண்டு பெரிய சிங்கள கட்சிகளும் தாம் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பலப்படுத்த ஜேவிபி அமைப்பினைப் பயன்படுத்திய பின் அதனை வேட்டையாடியதை அறிவோம். தற்போது நிலைமை முற்றிலும் அவ்வாறாக இருக்கப் போவதில்லை. காரணம், நமது விடுதலைப் போராட்டம் ஒரு உச்ச வளர்ச்சி பெற்று இறுதி வெற்றிகளை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது. எனவே இன்றைய கூட்டானது துாய சிங்கள இனவாதப் பண்பு கொண்டது. ஒற்றை முகத்துடன் நம்மை எதிர்கொண்டு நசுக்கும் உள்ளடக்கக் கூறுகளையே அதிகமாகக் கொண்டுள்ளது.

புலிகளை இல்லாதொழிக்கும் வரை தொடர்ச்சியான போர், அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பேச்சுக்களுக்கு ஒரு வருடத்துக்கு இடம் கிடையாது எனபன ஜேவிபியின் நிபந்தனைகள். சமாதனப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்பு என்ற அர்த்தத்தில் பார்ப்போம் எனின், "சமாதானத்திற்கான போர்" என்ற கருத்தாக்கத்திலிருந்து முற்று முழுதான அழித்தொழிப்புப் போர் என்ற நிலைப்பாட்டின் பகிரங்கமான வெளிப்பாடு இது. வர்த்தக சமூகத்தின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான, லலித் கொத்தலாவ போன்றோர் வீதியில் இறங்கி சமாதானத்திற்காக பேரணி நடாத்தும் நிலைக்கு இன்றைய பொருளாதாரம் அதன் சேடமிழுக்கும் கட்டத்தில் உள்ளது. இருந்தும், கடுமையான பொருளாதாரச் சுமைக்கு தான் தயராவது மாத்திரமன்றி சந்திரிகா அரசையும் தயார்படுத்த ஜேவிபி முன்வந்துள்ளது எனின், அதன் மக்கள் நலன்சார் கொள்கை பற்றிய கபடத்தனத்திற்கு விளக்கங்கள் தேவையில்லை. ஆக, சந்தேகத்திற்கு இடமின்றி இன அழித்தொழிப்பு யுத்த நிகழ்ச்சி நிரல் தயாராகி விட்டது.

ஒப்பந்த சரத்து விடயங்களுக்கு வருவோம் எனின்,

. . .இக்காலப்பிரிவினுள், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஸ்திரமாக நடாத்திச் செல்வதற்கு அவசியமான ஒத்துழைப்பைப் பாராளுமன்றத்தினுள் வழங்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி மேலும் உடன்படுகின்றது... யுத்தம் தவிர வேறெந்த நோக்கமும் சந்திரிகா அரசிடம் கிடையாது என்பதை சோல்ஹெரீயின் தலைமையிலான நோர்வே பேச்சுவார்த்தை முயற்சிகளைப் புதைத்ததன் மூலம் தெளிவாகவும் முடிவாகவும் ஏற்கனவே அரசு வெளிப்படுத்திவிட்டது. இப்படிப்பட்ட அரசையும் அரசாங்கத்தையும் ஸ்திரமாக்குவதற்கு ஜேவிபி முன்வந்துள்ளது எனின், ஜேவிபியானது, அரசை விட யுத்தத்தில் தீவிரமாக உள்ளது புலனாகின்றது. மேலும் அரசு யுத்தத்தில் உறுதியாக இருக்கும் எனின், அரசிற்கான ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் என்ற மறைமுக அர்த்தத்தையும் அச்சரத்துக் கொண்டுள்ளது.

சரத்து 3 இல் கருத்துக் கணிப்பினை இரத்து செய்ய வற்புறுத்திய ஜேவிபியின் நோக்கம், ஜனாதிபதியின் ஏதேச்சாதிகார முறை உடனடியாக ஒழிக்கப்படா விட்டாலும், அதிகாரப்பரவலாக்கல் என்ற அம்சத்தை அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து ஒழித்துக் கட்டுவதாகும். இதன் மூலம் மரபான சிங்கள ஆளுங்குழுமத்தை விடவும் ஒருபடி மேலே ஜேவிபி சென்றுள்ளது. சந்திரிகா அரசு தன் ஆளுங்குழும நலனுக்கு சோவினிசத்தைப் பயன்படுத்துகின்றது எனின், ஜேவிபி தன் சிங்கள சோவினிசக் கொள்கைக்கு சந்திரிகா அரசின் ஆளுங்குழுமத்தைப் பயன்படுத்தி வருகின்றது. ஆக, தொடர்ச்சியான போருக்கு வளங்கள் அருகிப்போய்விட்ட ஒரு கட்டத்தில் இரண்டும் இணைந்து வளப்பெருக்கத்தைச் செய்து கொண்டுள்ளன.

ஒப்பந்தத்தின் ஏழாவது சரத்திலுள்ள விடயங்கள் பார்வைக்கு அதிகம் ஜனநாயக தன்மை கொண்டவை போலத் தோற்றமளிக்கின்றன. ஆனால் உண்மையில், தற்போதுள்ள தேர்தல் முறையின் மூலம் தமிழ், முஸ்லீம், மலையதமிழ் மக்கள் பெற்றுவரும் அற்ப சொற்ப பிரதிநிதித்துவ வாய்ப்புகளையும் இல்லாதொழிப்பதே இதன் நோக்கமாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து அதனைப் பாராளுமன்றத்திற்கு தருவதென ஏற்கனவே உடன்பட்டுவிட்ட நிலையில், அப்பாராளுமன்றத்தை அடுத்தமுறை கைப்பற்றி அல்லது அதில் தீர்மானகரமான சக்தியாக தான் வரும் விதத்தில் ஆட்சிமுறையை மாற்றியமைப்பதே ஜேவிபியின் முக்கிய இலக்காகின்றது. இவைகளே ஜேவிபி யின் மேற்படி ஜுஜனநாயகஜி சரத்தின் பின்னே இருக்கும் கபட நோக்கங்களாகும். இந்த நோக்கத்தினை இக்கட்சி நேரடியாயும் மறைமுகமாயும் ஏற்கனவே பிரச்சாரப்படுத்தியுள்ளது.

சரத்து எட்டு (அ ) பிரிவில் . . . வேறு புறம்பான காரணங்களால் சில பண்டங்களின் விலைகள் அதிகரிக்குமாயின். . . . . . என்ற ஜேவிபி முன்வைத்துள்ள சமரச கூற்றானது, யுத்தத்தினை நடாத்துவதற்கு அவசியமான காரணங்களால் விலைகளை அதிகரிக்க முடியும் என்ற உள் உடன்பாடு கொண்டதாகும். இதன் மூலம் ஜேவிபி . . . . . ( அ) பிரிவின் . . .எரிபொருள், பால்மா, சீனி, கோதுமை மா, அரசி இன்னோரன்ன பொருட்கள் சேவைகளுக்கு விலைகள் அதிகரிக்காதவாறு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் . . . என்ற வாசகங்களை ஒப்புக்கு வைத்து மக்களை ஏமாற்றியிருக்கின்றது. பின்னது முன்னதை நிலை மறுக்கின்றது.

சரத்து (ஆ) மற்றும் (இ) பகுதிகள் ஜேவிபி தன் புதிய இடது முகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சந்திரிகா நிர்வாகம் செய்து கொண்டுள்ள ஒரு தற்காலிக விட்டுக்கொடுப்பாகும். இது பற்றி கதிர்காமர் மூலமாக ஏகாதிபத்திய மற்றும் இந்திய சக்திகளுக்கு ஏற்கனவே விளக்கம் அளித்தாகிவிட்டது. இவ் ஒப்பந்தம் எப்போது முடிவிற்கு வருகின்றதோ அப்போது இந்த தாரைவார்ப்புகளை இரட்டை மடங்காக்கி விடுவது என்பது ஒரு கடினமான விடயமல்ல.

தொகுத்துப் பார்ப்போம் எனின், ஒப்பந்தத்தின் எந்தவொரு நிபந்தனையும் தமிழ் மக்களின் தேசிய, அரசியல் நலனுடன் எந்தவிதத்திலும் தொடர்பானது அல்ல என்பதுடன் யார் பரந்துபட்ட சிங்கள மக்களின் நலன்களுக்கான பிரதிநிதிகள் எனக் காட்டிக் கொள்வதற்கான போட்டியேயாகும் என்பது புலப்படும்.

ஆக இப் புதிய கூட்டு தெள்ளத் தெளிவாக நமது தேசத்திற்கு விரோதமானதே என்றாகி விட்டது. இது நமது குடியரசுக்கான நியாயத்தன்மையையும், அதற்கான சர்வதேச அங்கீகாரம் கோருவதையும் இலகு படுத்துகின்றது என்ற அர்த்தத்தில் இதில் ஒரு நேர்மறைத் தன்மையைக் கவனிப்போம். அத்துடன் அவ்வமைப்பின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூறுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கேனும் நமக்கு ஓரளவிற்கு மறைமுகமாக பயன்படும் எனின், அதனையும் பயன்படுத்திக் கொள்வோம்- அன்றைய நாட்களில் அவர்களின் இந்திய எதிர்ப்பானது இந்தியப் படைகளை இம்மண்ணில் இருந்து அப்புறப்படுத்துவதில் ஏதோ ஒரு வகையில் நமது தேசத்திற்குப் பயன்பட்டதையும் இங்கு கவனிக்கத் தவறக்கூடாது-

நமது விடுதலைப் போராட்டத்தை கருவறுக்க ஒரு புதிய சோவினிசக் கூட்டுக்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. இக்கூட்டையும் எதிர்கொண்டு முறியடித்து நமது இறுதி இலட்சியத்தை நிறைவேற்றும் உறுதியை எமது மக்களின் போராட்டங்களுடாக வெளிப்படுத்தி வலுப்படுத்துவோம்.

எதிரிகளின் கூட்டை முன்னேறித் தாக்கு-வோம். அதுதான் இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத, ஆபத்தான யுத்தக் கூட்டிற்கு நமது தேசம் தர வேண்டிய பதிலாகும்.

விஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்: II

# பெண்கள்

உலகளவில் அடக்குமுறைக்குள்ளா-கும் பெரும் பிரிவினராக பெண்கள் உள்ள-னர். தேசங்கள், மதங்கள், நாடுகளின் சட்டங்கள், கலாச்சார பழக்கவழக்கங்கள், பொருளாதார வாழ்வு சார்ந்து பெண்கள் மீதான அடக்குமுறைகள் வேறுபட்ட வடி-வங்களில் வெளிப்பட்டாலும், ஒட்டுமொத்-தத்தில் உலகெங்கிலுமுள்ள பெண்கள் ஆணாதிக்க முறைமையினால் நசுக்கப்-பட்டு வருகின்றனர். பெண்களின் மீது தமது அதிகாரத்தை பிரயோகித்து பெண்களின் சுதந்திர வாழ்வை நசுக்கி வருவதன் மூலம் ஆண்கள் சமூக அளவில் நலன்களை அனுபவித்து வருகின்றனர். இதில் ஒவ்-வொரு ஆணுக்கும் நேரடி பங்குண்டு. எனவே ஆணாதிக்க முறைமையை பாதுகாப்பது, அதை பௌதீக - சித்தாந்த ரீதியாக மறுவுற்பத்தி செய்வது உலகெங்கிலுமுள்ள ஆண்களின் தேவையாயுள்ளது. பெண்-களை ஆணாதிக்க சட்டகத்துக்குள் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்காக சித்-தாந்தம், கலாச்சாரம், மதம், அரச சட்டங்-கள் மற்றும் கொள்கைகள், தொழிற் பாகு-பாடு மற்றும் பொருளாதார நிலை, ஒருதார திருமணம் மற்றும் பாலியல் தெரிவு, குடும்பம், குடும்ப மற்றும் சமூக வன்முறை... என பிரயோகிக்கப்படுகின்றன.

பெண்கள் மீது ஆண்கள் மேற்கொண்டு வரும் அதிகாரத்துவமே ஆணாதிக்க முறைமையின் சாரமாகும். இதன் இயக்கப் போக்கை, இது எவ்வாறு செயற்படுகிறது என்பதை இனங்காண்பது, ஆணாதிக்க முறைமையை தகர்க்க விழிப்புணர்வு கொள்வது, சகோதரித்துவ உணர்வில் பிணைவது, போராடுவது, உரிமைகளை ஸ்தாபிப்பது பெண்களின் அரசியலாகும். ஆணாதிக்க முறைமையை தகர்த்து தமது நலன்களை ஸ்தாபிக்க பெண்கள் மேற்கொள்ளும் போராட்டம் பெண்விடுதலை போராட்டமாகும்.

இப்பின்புலத்தில் நமது ஈழத்தமிழ் தேசத்தில் பெண்களது நிலையை அணுகுவோம்.

வர்க்க, சாதிய, மத, நிற, பிரதேச, கல்வி நிலை சார்ந்து நம் தேசத்து பெண்களிடையே வேறுபாடுகள் நிலவுகின்ற அதேநேரம், ஆணாதிக்க முறைமையினால் அடக்கப்படுகிறவர்கள் எனும் வகையில் நமது தேசப் பெண்கள் அனைவரும் தமக்கான பொதுவான பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர். அவ்வகையில் பெண்கள் ஒரு சமூகப் பிரிவினராவர்.

நமது பெண்களின் வாழ்வும் சமூக மாற்றங்களுக்கேற்ப மாற்றமுற்று வருகிறது. ஒரு ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்த சமூக வாழ்விலும் விட இன்று நமது பெண்களின் வாழ்வில் மாற்றங்கள் நிகழந்துள்ளன. இம்மாற்றங்களை உருவாக்குவதில் பெண்-கள் பழைய முறைமைக்கெதிராக வெளிப்-படுத்தி வரும் எதிர்ப்புகள், மாற்றங்களுக்-கான பெண்களின் ஆர்வங்கள் ஆகியனவும் இழைந்துள்ளன.

காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த மாற்றங்கள், பின்காலனிய காலத்திலான மாற்றங்கள், நவகாலனித்துவ பொருளாதா-ரம் அதன் துணைவிளைவுகளான பசுமைப் புரட்சி மற்றும் நில உச்சவரம்புக் கொள்கை மற்றும் நீலப்புரட்சி (கடற்றொழில் நவீனமயப்-படல்), கல்விக்கொள்கை, சுகாதாரக் கொள்கை (குடும்பத்திட்டம்), நகரமயமாக்-கல் மற்றும் அதனையொட்டிய தொழில் வளர்ச்சி ஆகியவற்றினால் உருவான மாற்றங்கள், தேசிய அடக்குமுறையினன்



விளைவான போராட்ட சூழலினாலும் புலம் பெயர்வாழும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் என பெண்களின் வாழ்வில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை நாம் வகைப்படுத்தலாம். இம்மாற்றங்கள் முன்னோக்கியனவாய் இருந்தாலும் கூட, கூடவே புதியமாற்றங்-களுக்கேற்ப பெண்களை அடக்குவதில் ஆணாதிக்கமுறைமையும் மாற்றமுற்று புதுப்புது அடக்குமுறை வடிவங்களை வெளிப்படுத்தி வருவதையும் நாம் காணக் கூடியதாயுள்ளது.

83களின் பின்னரான போராட்ட சூழல் பெண்களின் சமூக வாழ்வில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதில் நேர்மறை மாற்றங்களைப் போன்றே எதிர்மறையானவையும் காணப்படுகின்றன. குடும்பம், மதநிறுவனங்கள், கல்விக் கூடங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு சங்கங்கள் ஆகிய சிவில் சமூக அமைப்புகளில் யுத்தம் தளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய இறுக்கமான ஆண் தலைமைத்துவத்திலான குடும்பமுறை இன்று தளர்வுறுகிறது. பெண்க-ளின் தலைமைத்துவத்திலான குடும்பங்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் பொருளா-தார சுமைகள் பெண்களை அழுத்துவனவா-யுள்ளன. கணவன் இல்லாத அல்லது உடனில்லாத பெண்களைத் திருமணம் செய்துகொள்வது என்பதிலும்விட பாலியல் ரீதியாக சுரண்டுவதே அதிகளவில் காணப்-படுகிறது. மறுபுறம் பெண்கள் "கற்பு" எனும் சங்கிலியை உடைத்துக்கொண்டு வெளிவ-ருவதும் விரிவாகிறது. இன்னொருபுறம் சீதனத்தின் பேரம் நம்பமுடியாதளவுக்கு அதிகரித்து வருவதால் இளம் பெண்களில் ஒருபிரிவினர் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது சமூகஅளவில் பெண்களின் பாலியல் சார் உரிமைகளை தடைசெய்து அவர்களை தண்டிப்பதாயுள்ளது. அதேபோது உயர் கல்வி மற்றும் தொழிலுக்கான சூழல் மறுக்கப்பட்டிருப்பதால் வாழ்க்கைக்கான இலக்குகள் இல்லாது இளவயது திருமணங்-களும் தாய்மையடைதலும் அதிகரித்து வருகின்றன. சமூக ஒழுங்கு சிதைவுற்றிருப்-பதால் குடும்ப வன்முறைகளும் அதிகரித்துள்ளது.

பெண் கல்விக்கு சமூக அளவில் தடைகள் இல்லை. ஈழத்தமிழ் சமூகம் தென்னாசியாவின் ஏனைய மக்கள் சமூகங்கள் அனைத்திலும் விட பெண் கல்வியில் நாட்டமுடையதாயுள்ளது. ஆனால் யுத்தம் காரணமாக கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பான சூழல் அதிகமான பெண்களுக்கில்லை. பெண்களின் சமூக அளவிலான நடமாட்டம் அதிகரித்திருக்கி-றது. பெண்களே அதிகளவில் வெளியில் பயணம் செய்து காரியங்களை மேற்கொள்-கின்றனர். போராட்டத்தில் பெண்கள் ஆயுதம் ஏந்தி நிற்பது சமூகத்திலும் பெண்களுக்கு தைரியத்தை ஏற்படுத்தியுள்-ளது. பெண்கள் மீதான ஆண்களின் அத்து-மீறல்களையும் இது மட்டுப்படுத்தியுள்ளது. மறுபுறம் எதிரிகளின் அச்சுறுத்தல் காரண-மாக பெண்கள் வெளியில் நடமாட முடியாது தமக்குத்தாமே "சுய ஊரடங்குச் சட்டத்தை" விதித்துக்கொள்ள நேர்ந்துள்ளது.

சமூகத்தில் பெண்கள் அனைவருமே பொருளாதார தேவைகள் காரணமாக தொழிலில் ஈடுபட மனத்தளவில் தயாராயுள்-ளனர். "வீட்டுவேலையுடன் மட்டுப்படுத்தப் பட்டிருக்கும் பெண்" எனும் நிலையும் சிதைவு-றுகிறது. இது நேர்மறை மாற்றமாகும். அதேநேரம் பாலியல் தொழில் செய்து தமது வாழ்வை நடாத்துவதற்கு பெண்கள் தள்ளப்பட்டிருப்பது எதிர்மறை விளைவாகும்.

போராட்டத்தில் பெண்களின் நேரடி பங்கேற்பானது பெண்கள் சார்ந்து சமூகம்

(தொடர்ச்சி 11ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்க அரசின் தன்வினை...

அணு ஆயுதங்களைக் கவசமாக்கிக் கொண்டு, தன்னை யாராலுமே நெருங்க முடியாது எனும் இறுமாப்புடனிருந்த உலகப் பயங்கரவாதியான அமெரிக்க ஏகாதிபத்தி-யத்தின் பொருளாதார, இராணுவ மையங்-கள் தகர்க்கப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய முகாம் காப்பாளனாக, உலக சுரண்டல் முகாமின் தலைவனாக தன்னை வரித்துக் கொண்டிருந்த அமெரிக்காவின் மீது அதிர்ச்சி மிக்க தொடர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

எத்தனை அநியாயங்கள், அட்டுழியங்-கள் அமெரிக்க அரசினால் இந்தக் கணம் வரையில் உலக மக்களுக்கு இழைக்கப்-பட்டு வருகின்றன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க, அரபு நாடுகள் எங்கும் என்னென்ன வடிவங்களிலெல்லாம் இவர்கள் சுரண்டலை மேற்கொண்டு வருகிறார்கள். எப்படியெல்லாம் இம்மக்கள் சமூகங்களை யுத்த அச்சுறுத்தலுக் குள்ளாக்கி வருவது-டன் உள்நாட்டு யுத்தங்களை தூண்டிவிட்டு மக்கள் அழிவிற்குக் காரணமாயிருக்கிறார்-கள். அரசியல், பொருளாதாரம், போரியல், விஞ்ஞானம், மருத்துவம், அறிவுத்துறை, ஊடகத்துறை... என அனைத்திலும் தமது பயங்கரவாத ஆதிக்கத்தை நிறுவி உல-கில் அதிகாரமற்ற நாடுகளின் மக்களை துன்புறுத்தி வருகிறார்கள். மூன்றாமுலக மக்களின் பட்டினி நெருப்பில் குளிர்காய்ந்து கொண்டு தாம் யாராலும் நெருங்க முடியாத பாதுகாப்பு வலையத்தில் இருப்பதான மமதையில் இருந்து வருகிறார்கள். இவர்-கள் மேற்கொண்டுவரும் அநியாயங்களுக்-கும் ஆக்கிரமிப்புகளுக்குமான ஒரு எதிர்-வினையாகவே இத்தாக்குதல் அமைந்துள்-ளது. இத்தனை காலமும் எல்லை கடந்த பயங்கரவாதத்தில் ஈடுபட்டிருந்த இந்த ஆக்கிரமிப்பாளர்கள் தற்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பெரும் அக்-கறை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைக்-குத் தள்ளப்பட்டுள்ளனர். அமெரிக்க அர-சின் எல்லை கடந்த பயங்கரவாத செயல்-களுக்கான எச்சரிக்கையாக இத்தாக்கு-தலை காண முடிகிறது.

பிரமாண்டமான நவீன பாதுகாப்பு ஏற்பாடுகளும், அணு ஆயுதங்களும் அர்த்-தமிழந்துவிடும் என்பதை இராணுவ வல்ல-மைத் திமிர் கொண்ட அரசுகளுக்கு மீளவும் இத்தாக்குதல் உணர்த்தி நிற்கிறது. போரா-ட்டத்தின் வலிமை ஆயுதங்களில் அல்ல என்பது ஆழமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

தம்மைத் தாக்குபவர்களை அடையா-ளம் தெரியாது துடைத்தெறிவோம் எனும் அச்சத்தை பரப்பி வரும் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் தற்போது இவ்விட-யத்தை எவ்வாறு அணுகப் போகிறார்கள்? அமெரிக்காவின் பேர்ள் கடற்படை துறை-முகத்தை இரண்டாமுலக யுத்தத்தின் போது ஜப்பான் தாக்கியதற்கு பதிலடியாக ஜப்பானிய மக்களை அணுக்குண்டால் பொசுக்கியது போன்ற மாபாதகத்தையா இவர்கள் மீளவும் செய்யப் போகிறார்கள்? திரும்பத் தாக்கப் போகிறோம் என இவர்கள் அச்சுறுத்தல் விடுப்பது யாரை இலக்கு வைத்து? இவர்கள் கூறும் பதிலடிக்கு உண்மையில் இலக்குளாக்கப்படப் போவது சாதாரண மக்களே.

தாம் மேற்கொள்ளப் போகும் ஆக்கிர-மிப்பை நியாயப்படுத்த, ஒரு நாடு மீது தாக்குதல் நடாத்தப்பட்டால் தன்னை தாக்-கிய நாட்டை திரும்பத் தாக்க அந்நாட்டுக்கு உரித்துண்டு எனும் ஐ.நா. சரத்தை திரும்பத் திரும்ப பிரச்சாரப்படுத்துகிறார்கள். அவ்-வாறே, நேட்டோ நாடுகளின் வாஷிங்டன் ஒப்பந்தத்தை மேற்கோள்காட்டி, நேட்டோ கூட்டில் உறுதியான உறுப்புரிமை உள்ள 19 நாடுகளில் ஏதாவதொன்றின் மீது தாக்குதல் நடந்தாலும் அது ஒட்டுமொத்த நேட்டோ கூட்டையும் தாக்கியதாகக் கருதப்படும் என அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் இணைந்து பயமுறுத்துகிறார்கள்.

"சட்ட விதிகளுக்கமைய" போர் தொடுக்க ஒப்பந்தங்களை மேற்கோள் காட்டுபவர்களுக்கு, சட்டப்படி நிரூபனமான



எதிரியின் ஆலோசனையைக் கேட்க விரும்பினால், அமெரிக்காவிற்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். மிகுந்த நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். ஆத்திரத்தில் எவரையும் வேட்டையாடாதீர்கள். நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாத உலகப் பிரச்சனைகள், ஏற்றத் தாழ்வான பொருளாதார அநீதி, பலம் குறைந்தவர்கள் மீதான ஆதிக்க வெறி மிகுந்த தாக்குதல்கள் ஆகியவற்றில்தான் பயங்கரவாதத்தின் வேர்கள் முளைவிட்டு நிற்கின்றன. இந்தத் தீமைகளில் இருந்து விடுபடுவதில் அமெரிக்கா கவனம்செலுத்த வேண்டும்ஜி

— பிடல் காஸ்ட்ரோ

குறிப்பான தாக்குதல் இலக்கு கிடையாது. தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்புடைய முஸ்லீம் நாடுகள் மீது, குறிப்பாக ஆப்கானிஸ்தான் மீதும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. ஏற்கனவே 25,00,000 ஆப்கன் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி பாகிஸ்தானில் அகதிகளாக வாழும் நிலையில், தொடர்ச்சி-யான யுத்தங்களினால் பெரும் வறுமையை-யும் வரட்சியையும் ஆப்கன் மக்கள் அனுப-வித்து வரும் நிலையில் அம்மக்கள் மீது போர் தொடுக்க அமெரிக்காவும் அதன் பங்காளி நாடுகளும் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்பது என்ன நியாயம்?

வளைகுடா யுத்தத்தின் பின்னர் தான் கண்டுபிடித்துள்ள புதிய நாசகார போர்க் கருவிகளையும், உயிர்க்கொல்லி ஏவுகணை-களையும் பரீட்சிப்பதற்கு ஆப்கன் மக்களை-யும் மேற்காசிய மக்களையும் இலக்காக்கப் போகிறதா? பழிக்குப் பழி எனும் பெயரில் இவர்கள் மக்கள் மீது தாக்குதல் நடாத்தும் வழிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் உலகெங்கும் எரிமலையாய் குமுறிக் கொண்டிருக்கும் மக்களின் எதிர்ப்பை நிச்சயம் அமெரிக்க அரசு எதிர் கொள்ள நேரிடும். அமெரிக்க ஏகாதிபத்தி-யம் பதில் தாக்குதல் எனும் பெயரில் மக்கள் அழிவு நடவடிக்கையில் ஈடுபடுமாயின், தனக்கு ஏற்படும் அழிவுகளை தானே தீவிரப்-படுத்திக் கொண்டதாகவே அது அமையும். ஆப்கான் மக்கள் மீது தாக்குதல் நடாத்து-வது என்பது உலகெங்கும் உள்ள ஏகாதிபத்-திய எதிர்ப்பு சக்திகள் மீது தாக்குதல் நடாத்துவதாகும். இதை உடன் நிறுத்த நாமனைவரும் குரல்கொடுக்க வேண்டும்.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க, அரபு நாடுகளில் மாத்திரமல்ல மேற்குல-கிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் உருவாகி வருகிறார்கள். உலகமயமாக்கல் எனும் பெயரில் வியாபித்துவரும் புதிய சுரண்டல் வடிவங்களால் பாதிப்புக்குள்ளா-கும் ஐரோப்பிய, அமெரிக்க மக்களும் தமது போராட்டங்களை வெளிப்படுத்தத் தொடங்-கிவிட்டனர். சியாட்டிலிலும், சுவீடனிலும், இத்தாலியிலும் உலக வர்த்தக அமைப்பிற்-கெதிராக இரத்தம் சிந்தும் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. உலக வர்த்தக மையத்-தினதும் பென்டகனினதும் மீதான தாக்குத-லானது உலகெங்கும் போராடிக் கொண்டி-ருக்கும் மக்களுக்கு ஒரு ஆசுவாசத்தை ஏற்படுத்தியை அவர்கள் வெளிப்படுத்தி-யுள்ளனர்.

ஏற்கனவே வீழ்ச்சி கண்டிருந்த அமெரி-க்க பொருளாதாரம் இத்தாக்குதலுடன் ஒரு பெரும் சரிவை எதிர்கொண்டுள்ளது. இது டொலரின் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகள் அனைத்தினதும் பொருளாதாரத்தை, ஏன் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்தை-யும் பாதிப்பதாயுள்ளது. டொலரின் பெறுமதி வீழ்சியுற்றது, தங்கம், பெற்றோல் ஆகியவற்-றின் விலை உயர்வடைந்தது, பங்குச்சந்தை சரிவடைந்துள்ளது. இந்த பொருட் சேதத்-தை இவர்கள் மீள சீரமைத்துக் கொண்டா-லும் இத்தாக்குதல் ஏற்படுத்தியுள்ள பொரு-ளாதார, நிர்வாக நாசகாரமானது அமெரிக்-காவின் பொருளாதார நிர்வாக கட்டமைப்-பில் ஆழ வேரோடி நீண்டகால கேடுகளை, நெருக்கடிகளை ஏற்படுத்திடும். ஏகாதிபத்தி-யம் உலக நாடுகள் மீது பதித்துள்ள பொருளாதார சுரண்டல் எனும் இரும்புக்

(தொடர்ச்சி 7ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழமும் முஸ்லீம் மக்களும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு, இராணுவ ரீதியில் எதிரிகள் மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகளானது தீர்க்கமானதாக மாறி வருகின்றன. இவ்வமைப்பானது, அரசியல், ஜனநாயகப் பண்புகள் விடயத்தில் இதுவரை காலமும் இழைத்த கடுமையான தவறுகளை அண்மைக் காலங்களில் படிப்படியே களைந்து வர முற்படுவது பாராட்டுதற்குரியதாகும். தமிழீழ தேசிய விடுதலையை நேசிக்கும், அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும், மக்கள் அமைப்புகளுக்கும், விடுதலை அமைப்புகளுக்கு இது மேலும் உற்சாகம் தருவதாக உள்ளது.

குறிப்பாக, வடக்கு கிழக்கு பிரதேசங்களை தமது பாரம்பரிய பூமியாகக் கொண்ட முஸ்லீம் மக்கள் தொடர்பாக விடுதலப் புலிகள் இதுவரை சாதித்து வந்த தமது மௌனத்தை மிகவும் தயக்கத்துடனே ஆயினும் களைய முன்வந்திருப்பது வரவேற்புக்குரியதாகும். தென் தமிழீழத்தில் கரிகாலனின் அண்மைக்காலக் கூற்றுக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம் அவசியம் தீர்த்தாக வேண்டிய விடயங்கள் என இனங்காண்பவற்றை எதிர்கொள்ளவதற்கு போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகள் எந்தவித தயக்கமும் கொள்ளத் தேவையில்லை. இவ்வாறான தயக்கங்களும் தாமதங்களும் சுதந்திர அரசை நிலைநாட்டவும், சமாதானம், அரசியல் சமத்துவம் என்பவற்றை விரைந்து சாதிப்பதில் மட்டுப்படுத்தல்களையே ஏற்படுத்தும்.

இழைக்கப்பட்ட தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கான பக்குவமும் மறுபடியும் அவை நடக்காது என்பதை உறுதிப்படுத்தும் துணிச்சலும் இன்றைய கட்டத்தில் அவசியமாகும். இராணுவரீதியில் வெளிப்படும் உலகை ஆச்சரியப்படுத்தும் துணிச்சலும் தீரமும் அடிப்படையானதும் அவசியமானதுமான அரசியல் விடயங்களில் வெளிப்படாதிருப்பதன் ஆணிவேர் நமக்குள் வேர் கொண்டு வியாபித்து நிற்கும் தவறான சித்தாங்கள், ஐதீகங்கள், புனையப்பட்ட வரலாறுகள் என்பவற்றில் புதைந்துள்ளன. இதுவரை கால விடுதலைப் போராட்டத்தில், நடைமுறையில் பெண்கள் போராட மாட்டார்கள், காதலும் திருமணமும் போராட்டத்திற்குத் தடை, சாதியம் என்பது தேசிய விடுதலைக்கான போராட்ட காலகட்டத்தில் பேசப்படக்கூடாது, பிரதேச வாத அணுகுமுறைகள் பற்றிப் பேசுவது போராட்ட சக்திகளைப் பிளவுபடுத்தும் போன்ற கருத்தாதிக்கங்கள் விடுதலைப் புலிகள் உட்பட விடுதலைப் போராட்ட அமைப்புகளைப் பீடித்திருந்தது.

அவ்வாறான ஒன்றாகவே முஸ்லீம் மக்கள் பற்றிய ஐதீகங்களும், கணிப்புகளும் தப்பெண்ணங்களும் இனவாதமும் போராட்டத் தரப்புகளின் மீது செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இவையும் முஸ்லீம்கள் தொடர்பாக தமிழ்த்தரப்பில் விடப்படும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் தரப்பில் விடப்பட்ட, விடப்படுகின்ற தவறுகளும் விரைந்து களையப்பட வேண்டும். இது இருதரப்பு மக்களின் ஆரோக்கியமான அரசியல், சமூக வாழ்விற்கு அவசியமாகும்.

ஒரு மாபெரும் அரசியல் இலட்சியத்தை அடையும் நீண்ட பயணம் மிகக் கரடுமுரடானது. அதில் சாதனைகள் மாத்திரமல்ல பல கசப்பான, விரும்பத்தகாத தவறுகளும் இடம்பெற்று விடுவதுண்டு. அப்படி விடப்படும் தவறுகள் உண்மையான இலட்சியத்திற்கு பாரிய தடையாக பாரிய அமைவது எப்போது எனில், நடந்து விட்ட தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாத போதுதான். அதற்கான பரிகாரங்கள் செய்யபடாத போதுதான், அத்தகைய தவறுகள் மீண்டும் விடப்படுகின்ற வாய்ப்புகளை தொடர்ந்தும் நாம் தெரிந்தே அனுமதிக்கும் போது தான். நமது தரப்பில் விடப்பட்ட தவறுகளை ஒப்புக்



கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பிற்கு நாம் எந்தவித முன்னிபந்தனையும் வைப்பது சரியான அணுகுமுறையல்ல. ஒரு கட்டத்தில் இழைக்கப்பட்ட தவறுகளை நாமே முன்வந்து ஒப்புக்கொள்வதானது, நமது இலட்சியத்தை மேலும் பலப்படுத்துகின்றது. நமது இலட்சியத்தைப் புடம்போடுகின்றது.

என்னதான் நாம் கோசங்கள், முழக்கங்களை வார்த்தைகளில் முன்வைத்தாலும், அவை நடைமுறையிலும், அன்றாட செயற்பாடுகளுடன், அணுகுமுறைகளுடன் எந்தளவிற்கு முரணற்ற விதத்தில் ஒத்திசைகின்றன என்பதைப் பொறுத்தே நாம் எதிர்பார்க்கும் உண்மையான, முன்னேற்றங்களை எட்டச் செய்யும். எண்பதுகளில் தமிழ் அமைப்புகள் முஸ்லீம் மக்கள் மீது பிரயோகித்த அக்கிரமங்கள், ஜனநாயக மறுப்பு நடிவடிக்கைகள், 90 இல் வடதமிழீழத்தில் இருந்து முஸ்லீம் மக்களை முற்றாக வெளியேற்றியது தொடக்கம் கிழக்கு மாகாணப் படுகொலைகள், இன்று அன்றாடம் அவர்கள் மீது அங்குமிங்குமாக மேற்கொள்ளப்படும் மீறல்கள் வரைக்கும் (ஆட்கடத்தல், மிரட்டிப் பணம் பறித்தல், வாகனங்கள் பறிமுதல், விவசாய நிலங்கள் மற்றும் கால்நடைகள் பறிப்பு, கணணிகள் கொள்ளையிடல் என இப்படி விரிவடைந்து செல்கின்றது) நடைபெறும் நிகழ்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழும் தற்செயல்களின் பாற்பட்டதாக கொள்ள முடியுமா? நடக்கும் தவறுகளுக்கான பொறுப்பில் இருந்து தமது அணிகளைக் காப்பாற்றும் நோக்குடன் சாக்குப் போக்குகள் கூறுவதில் விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைமைகள் ஈடுபடுவதோ என்னவகை விளைவுகளை ஏற்படுத்தும்? இவ்வாறான நிகழ்வுகளுக்குப் பின்னே நின்று எம்மையறியாது ஒரு தவறான ஆதிக்க சிந்தாந்தம் வழிநாடாத்துகின்றது என்பது இனங் காணப்பட வேண்டும். அது நம் போராட்டத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

எந்தவொரு தேசியவாதத்திற்கும் இரண்டு முகங்கள் உள்ளது. ஒன்று புதிய உன்னத வரலாற்றைப் படைக்கும் புரட்சிகர முகம். மற்றயது ஆபத்தான முகம். இந்த இரண்டாவது முகம் பிறரை இழிவுபடுத்தும், ஆக்கிரமிக்கும். விரட்டியடித்து சுத்திகரிப்புக்குள்ளாக்கும். அடக்கியாளும் போக்குகள் கொண்டது. தனது தவறான செயற்பாடுகளை அது நியாயப்படுத்திக் கொண்டு செல்லும். இத்தவறுகளைச் சுட்டிக்காட்டுப் போது சுட்டிக்காட்டுபவர்கள் மீது கோபம் கொப்பளிக்கும். "பிற" என்று தான் கருதுபவற்றின் மீது முழுப்பழியையும் போட்டுவிட்டுத் தான் தப்பித்துக்கொள்ள முயலும். சமயங்களில் புரட்சிகர தேசியவாதத்திற்குள்ளும் கூட, இப்படிப்பட்ட சிலவகை ஆபத்தான பண்புகள் ஊடுருவிக் கிடக்கவும் செய்யும். நமது போராட்ட வரலாற்றினை ஒரு திறந்த பரிசீலனைக்கு உட்படுத்துவோம் எனின் இப்போக்குகளின் கலவையை, சிக்கலான தன்மையை துல்லியமாகவே காண முடியும்.

நமது பரந்துபட்ட மக்கள் தவறான சித்தாந்தங்களின் பிடிக்குள் வரலாற்று ரீதியாக நிலவிய ஆதிக்க சக்திகளினால் வைக்கப்பட்டுள்ளனர் எனின் அவற்றைத் தகர்த்து நமது மக்களை புரட்சிகர சித்தாந்தமயப்படுத்தும் பொறுப்பும் விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்கும் சக்திகளின் கடமையாகின்றது. நாமும் கூட சமூகத்தின் கூறு. அதன் பிள்ளைகள் என்ற வகையில் ஆதிக்கச் சித்தாந்தப்பிடிக்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. இதன் பிடிக்குள் நாம் அகப்படாமலும், அதனை தகர்க்கவும் முன்னிபந்தனை நாம் உயர்ந்த பட்ச பிரக்ஜையுடன் இருப்பதே. அவ்வாறாக செயற்படுவதே.

இந்தப் பின்புலத்தில்தான் அண்மையில் முஸ்லீம்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கரிகாலனின் கருத்துக்களும் வே. பாலகுமரனின் சில கருத்துக்களும் ஒருபுறம் வரவேற்பினையும் மறுபுறம் சில விமர்சனக்கூறுகளையும் கொண்டுள்ளதைக் காண்கின்றோம். எரிமலை சஞ்சிகையில், பாலகுமாரன் இப்படிக் குறிப்பிடுகின்றார்...

...சிங்களப் பேரினவாதத்தினை சாந்தப்படுத்தி "சரணாகதி அரசியல்" நடத்தி தாங்கள் "நல்ல பிள்ளைகள்" என அதே பேரினவாதிகளால் பட்டம் பெறுவதில் மகிழ்ந்த முசுலீம் மக்களின் தலைமை, பேரினவாத கொடுங்கரங்கள் தம்மீது பாய்வது கண்டு அதிர்ந்து போயுள்ளார்கள். தாம் நடத்திய கேடான அரசியல் தமக்கு விளைவித்திருக்கும் கேடுகள் பற்றி தமது பிரதான எதிரி யார் என்பதை இனம் காண்பதில் தாமிழைத்த தவறுகள் பற்றி விரைவில் பூரணமாகவே அவர்கள் உணர்வார்கள். அன்று தந்தை செல்வா மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட பொழுது ஸ்ரீஇன்று உங்களுக்கு, நாளை எங்களுக்குஸி என்றுரைத்தார். நேற்றும் இன்றும் எங்களுக்கானது. இனி நாளை யாருக்கு? முசுலிம் தலைமை பெறப்போகும், மிகக்கசப்பான அனுபவங்கள், தாம் யாருடன் தோழமை கொள்ளல் வேண்டும் என்பதை உணர்த்தும்... என்கிறார்.

மேற்படி விமர்சனத்தில் சிங்கள இனவாதம் குறித்து முஸ்லீம் தலைமை கவனத்தில் கொள்ள வேண்டிய நியாயமான சுட்டிக்காட்டல் உள்ளது. அதேசமயம் இதனை வாசிக்கும் ஒருவருக்கு சாதாரணமாக எழுகின்ற சில வினாக்களை நாம் தட்டிக்கழித்துவிட முடியுமா?

தமிழீழ குடியரசு அமைய முன்னமே, தமிழதரப்பினால், தம்மீது இழைக்கப்பட்ட கொடுமைகளின் அனுபவத்திலிருந்து, "இப்போதே எங்களுக்கு இப்படியென்றால் நாளை எப்படியிருக்குமோ" என்று முஸ்லீம் மக்கள்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைக்கு வித்தாகும் மக்களின் நினைவாக...

நமது மக்களின் திரட்சியே நமது தேசம். நமது தேசத்தின் தொடர்ச்சியும், இருப்பும், எதிர்காலமும் நமது மக்கள்தான். நமது மக்கள் எதிர்கொண்டுவரும் அடக்குமுறைகள், துயரங்கள், சிந்திய கண்ணீர், இரத்தம், நடாத்தப்படும் போராட்டங்கள், அடைந்திடும் வெற்றிகள் நமது வரலாறாகும். நமது மக்கள் ஒவ்வொருவரும் நம் தேசத்தின் வரலாற்றை சுமந்து கொண்டுள்ளனர். நமது தேசத்தின் இருப்புக்கு, வாழ்வுக்கு அடையாளமாயுள்ளனர்.

நமது மண்ணை ஆக்கிரமித்து நம் தேச இருப்பை துடைத்தெறிய முயலும் எதிரிகள் நமது மக்களைக் கொன்றொழிக்கின்றனர். தேசிய ஆக்கிரமிப்பில் மக்கள் படுகொலை என்பது அடக்குமுறையின் உச்ச வடிவமாகும். இது இனஅழிப்புக்கு எதிராக அடக்கப்படும் மக்களை ஆவேசமூட்டுவதாயுள்ளது. தமது மக்கள் சிந்திய இரத்தத்திற்கு பழிவாங்குவதற்காக, எதிரிகளை தோற்கடித்து தமது விடுதலையை நாட்டுவதற்காக தேசம் மேலும் கொதிப்புறுகிறது. தேசவிடுதலை போராட்டம் மேலும் வலுப்பெறுகிறது.

இப்படியாக, படுகொலைக்குள்ளாகும் மக்கள் தம்மை அர்ப்பணித்து, தம்மையே உரமாக்கி தேச உணர்வை காட்டுத் தீயாக பரவச் செய்கின்றனர். போராட்டத்தை பலப்படுத்துகின்றனர். நமது போராட்டத்தின் வளர்ச்சியில், அதன் தீவிரத் தன்மையில் அழிக்கப்பட்ட மக்களின் அர்ப்பணிப்புகள் ஒன்று கலந்துள்ளன. அவ்வகையில் எதிரியினால் அழிக்கப்பட்ட நம் மக்கள் அனைவரும் நம் தேசத்தின் தியாகிகளாவர். நமது விடுதலையின் வித்துக்களாவர்.

தேசத்தின் பெயரால் தம்மை அர்ப்பணித்த மக்களை நினைவு கூர்வது தேசத்தின் கடமையாகும். தேசம் தான் இழந்துள்ள தனது மக்களை, எதிர்கொண்ட துயரங்களை, சிந்திய கண்ணீரை, மரண ஓலங்களை நினைவு கூர்வது தேசத்தை மேலும் பலப்படுத்தி அதன் போராற்றலை தீவிரப்படுத்திடும். அவ்வகையில் இவ் நினைவுகளுக்கும் ஓர் அரசியலுண்டு.

நமது போராட்ட வரலாற்றில் நாம் 60,000க்கும் அதிகமான மக்களை இழந்து நிற்கிறோம். 72 உலகத் தமிராய்ச்சி மாநாட்டில் கூட்டாக ஒன்பது பேரை இழந்தோம்.



அதைத் தொடர்ந்து எத்தனையோ இழப்புகள். குமுதினிப் படகில், குருநகரில், கொக்கட்டிச் சோலையில், வந்தாறுமூலையில், சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, குமாரபுரம், செம்மணி, மிருசுவில் படுகொலைகள் என நமது மக்களை நாம் இழந்துள்ளோம். இவை நம் தேசத்தின் இதயத்தில் பதிந்த மாறா வடுக்கள். ஈழத்தமிழர் தம் வரலாற்றின் அழியாத் துயரங்கள்.

ஆனால், மிகவும் வெட்கப்படவும் வேதனைப்படவும் கூடிய வகையில் தேசம் மக்களுக்கான தனது அஞ்சலியை கண்ணீரை செலுத்துவது வேகமான போராட்ட சூழலில் மறந்து போவதாயுள்ளது. மறுபுறம் இவ்வாறு நமது மக்களை நினைவு கூர்வது எதிரியை அச்சுறுத்துவதாக, தனது அடக்குமுறையே பாதிக்கப்பட்ட மக்களை பலப்படுத்துகிறது எனும் தோல்வி உணர்வுக்கு தள்ளிவிடுவதாக, சினமூட்டுவதாக உள்ளது. இதனால் மக்களின் தியாகத்தை நினைவு கூர்தல் என்பதுவும் எதிரிக்கெதிரான அரசியலாக, ஒரு போராட்ட வடிவமாக உள்ளது.

தென்தமிழீழ மக்கள் எதிரிகளின் அடக்குமுறைகளுக்கெல்லாம் அஞ்சாது துணிகரமாக தம் உடன் பிறப்புகளை நினைவு கூறத் தொடங்கியுள்ளனர். இது ஒட்டுமொத்த தேசத்திற்கும் சிறந்த முன்மாதிரியாயுள்ளது. இவ்வாறு தேசத்தின் பொதுவான நினைவு தினங்களை நினைவு கூர்வது பொதுவான அரசியல் நீரோட்டத்தின் அங்கமாயிராது அது அப்பகுதிசார் மக்களின் விடயமாகிப் போவது துயரத்திற்குரியதாகும். மக்கள் போராட்டங்கள் அரங்கிற்கு வந்ததுடன்தான் மக்களுக்கான நினைவு கூறல்களும் பகிரங்கமாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

செப்ரெம்பர் 90இல் தென்தமிழீழத்தின் மட்டக்களப்பில் படுகொலைக்குள்ளான நமது மக்களை தேசமாக நினைவு கூர்வோம். அந்நினைவுகளில் நாம் பலம் பெறுவோம். சுதந்திர தமிழீழத்தை தேசத்தின் வித்துக்களான நம் மக்களுக்கு சமர்ப்பிப்போம் என உறுதியேற்போம். இது நம்மவர்களின் சமாதியில் நாம் செலுத்தும் உயரிய அஞ்சலியாகும்.

¨ சியா

## அமெரிக்க அரசின்... (5ம் பக்கத் தொடர்ச்சி)

கரத்தின் அழுத்தத்தை தளர்த்த வேண்டிய நிலையும் இதனால் ஏற்பட வாய்ப்புண்டு.

கொல்லப்பட்ட தமது மக்களுக்காக தாம் பழிவாங்கப் போவதாக இவர்கள் உலகுக்கு குமுறிக்காட்டுவது பாசாங்காகும். உண்மையில் மக்களை பற்றிய அக்கறை இவர்களுக்கில்லை. தமது பொருளாதாரம் சிதைக்கப்பட்டு விட்டது, உலகின் மீது தாம் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் அதிகாரம் சரிவடையப் போகிறது என்பதில் தான் இவர்களது அக்கறைகள் அனைத்தும் குவிந்துள்ளன. தாக்குதல் நடந்த உடன் அமெரிக்க தலைமை சிந்தித்தது தனது பொருளாதாரத்தைப் பற்றித்தான் என அவர்களுக்கு சார்பான சில ஊடகங்களே குறிப்பிட்டுள்ளன.

அரசியல் தளத்தில் பார்ப்போமாயின், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கெதிரான உலக மக்களின் போராட்ட முறைகளில் இத்தாக்குதல் ஒரு புதிய திருப்பமாக உள்ளது. இது உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலில் ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள் ஆழ்ந்த ஆய்விற்குரியதாகும்.

சிறிலங்காவிலும் இந்தியாவிலுமுள்ள ஏகாதிபத்திய சித்தாந்தக் காவிகள், அமெரிக்காவுக்குக் காயம்பட்டதற்காக தமது காழ்ப்புகளை வெளிப்படுத்துகின்றனர். மூன்றாமுலகின் தொப்புழ்க்கொடியை அணுக்கதிர்கள் பதம் பார்க்கையில் இவர்கள் எங்கே போயிருந்தார்கள்? மக்களின் அழிவை எந்தப் போராளியும் விரும்புவதில்லை. தாக்குதலின் போது மரணித்த ஆயிரக்கணக்கான மக்களுக்காக நாம் கண்ணீர் சிந்துவோம். நமது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துவோம். ஆனால் பென்டகனில் இலக்கு வைக்கப்பட்ட அந்த ஆபத்தான மூளைகளை நாம் ஒரு போதும் மக்கள் எனும் வரையறைக்குள் அடக்க முடியாது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு பயங்கரவாதிகள் ஏகாதிபத்தியத்திற்கும் அதை சார்ந்த நாடுகளுக்கும் சிம்மசொப்பனமாய் இருக்கும் போராட்ட சக்திகளை பயங்கரவாதிகள் என்றே எப்போதும் எதிர்ப் பிரச்சாரம் செய்து உலகளவில் தமது சித்தாந்தத்தை உருவாக்கி விட்டிருக்கிறார்கள். அவ்வகைப் பிரச்சாரத்தை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மேலும் பலப்படுத்த முயல்கின்றார்கள். எனவே ஏகாதிபத்திய பயங்கரவாதத்தின் சித்தாந்த பிரச்சாரத்தை முறியடிப்பது நம் அனைவரதும் கடமையாகும்.

¨ சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரபுலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு

இன்று ஏகாதிபத்தியத்தை விட்டுக் கொடுக்காது எதிர்த்து நிற்கும் ஆற்றல்மிகு சக்தியாக அரபு - முஸ்லிம் மக்கள் திகழ்கின்றனர். வெள்ளை மேற்குலகின் அகங்காரத் திமிரையும், ஏகாதிபத்திய முகாமின் அனைத்து வகையான அடக்குமுறைகளையும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க, அரபு மக்கள் சமூகங்கள் அனைவரும் எதிர்கொண்டு வரினும் கூட, இந்த அடக்குமுறையை எதிர்த்து நேரடியாக போராடும் சக்தியாக அரபு - முஸ்லிம் மக்கள் தம்மை முன்னிறுத்திக் கொண்டுள்ளனர்.

அரபு - முஸ்லிம் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வானது நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டது. அரபு மக்களின் தேசிய வாழ்வை துவம்சித்து, அவர்களின் அடையாளங்களை, கலாச்சாரத்தை, பாரம்பரிய கலைகள் மற்றும் அறிவுத் தேடல்களை, பாரம்பரிய தலைநகரங்களை நாசகாரப்படுத்தியது வெள்ளை மேற்குலகு. பாரிய உயிர்ச் சேதங்கள், குரூரமான சித்திரவதைகள்... அதன் ஆழமான மாறா வடுக்களின் துயரங்களை தலைமுறை தலைமுறையாக அரபு - முஸ்லிம்கள் சுமந்து வருகின்றனர். 400 ஆண்டு கால சிலுவை யுத்தத்தின் குருதி தோய்ந்த நினைவுகளிலிருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை. வெள்ளை மேற்குலகும் அந்த மாறாத் துயரங்களிலிருந்தும், அடக்குமுறையின் அவமான உணர்விலிருந்தும் அவர்களை இன்று வரையில் மீள விடவுமில்லை.

பிரித்தானிய காலனியாதிக்கம் உலகில் அஸ்தமிக்கத் தொடங்கிய 20ம் நூற்றாண்டின் தொடக்க கட்டத்திலும் அரபு - முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் வெள்ளை மேற்குலகினால் புதிய வடிவத்தில் ஆரம்பமாயின. அரபு முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசமான மேற்காசியா நிலப்பரப்பில் இஸ்ரேல் எனும் புதிய ஏஜெண்டை உருவாக்கி அதன் மூலம் தமது நலன்களை பூர்த்தி செய்துகொள்ள தொடங்கினர்.

1. அரபுலகின் இயற்கை சொத்தான எண்ணெய் வளத்தை தமது கட்டுபாட்டில் வைத்திருப்பது மற்றும் எண்ணெய் வர்த்தகத்தை தமது விருப்பத்திற் கேற்ப தீமானிப்பது ஆகியன மூலம் முழு உலகின் மீதும் தமது ஆதிக் கத்தை நிறுவுதல்

2. மேற்காசியாவின் நில, கடல், தள வாய்ப்புகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்

3. அரபு - முஸ்லிம் உலகின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவுதல்

ஆகிய நோக்கங்களுடன் இஸ்ரேல் எனும் சியோனிஷ அரசு அமெரிக்க - பிரிட்டிஷ் தலைமையில், மேற்குலகின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது.

இதற்காக பாலஸ்தீன அரபுக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டது. பாலஸ்தீனியர்கள் படுகொலைக்கு விதிக்கப்பட்டவர்களாயினர். பாலஸ்தீன தேசமே அகதி வாழ்விற்குத் தள்ளப்பட்டது. இஸ்ரேல் அரசை அத்துமீறி உருவாக்கியதுடன் நின்றுவிடவில்லை இவர்கள். இஸ்ரேலை தளமாக்கி ஒட்டுமொத்த அரபு - முஸ்லிம் உலகையும் அச்சுறுத்தத் தொடங்கினர். எண்ணெய் வளத்தில் தமது ஆதிக்கக் கரங்களைத் திணித்தனர். எண்ணை விலையை தாமே தீமானிக்கத் தொடங்கினர். அரபு நாடுகளில் கொள்ளையடிக்கும் எண்ணெய் வளத்தை தம் நாடுகளுக்குக் கடத்திச் செல்வதற்காக கடல் பாதைகளையும், துறைமுகங்களையும் அரபு நாடுகள் குறைந்த கட்டணத்தில் தமக்கு விட்டுத்தரும் விதத்தில் பாரபட்சமான ஒப்பந்தங்களைத் திணித்தனர். இவையெல்லாம் சுதந்திர உணர்வுடைய அரபு நாடுகளை ஆத்திரத்திற்குள்ளாக்கின.

ஏகாதிபத்திய, மேற்குலகின் நோக்கங்களை எதிர்த்த அரபு நாடுகளை இவர்கள் "பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள்" என முத்திரை குத்தினர். லிபியாவின் கர்னல் கடாபி, ஈராக்கின் சதாம் ஹீசைன், சிரியாவில் அசாட் என ஏகாதிபத்திய நோக்கங்களுக்கு அடிபணியாதவர்கள் மீது



தாக்குதல் நடாத்தினர். அரபு நாடுகளுக்கிடையே பகைமையை விதைத்தனர். ஈரான், ஈராக் ஆகிய நாடுகளை மோதவிட்டு, மேற்காசியாவில் தாம் மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பிலிருந்து அரபுலகின் கவனத்தை திசைதிருப்பி நமது நலன்களை நிறைவேற்றிக் கொண்டனர். இஸ்ரேல் பற்றிய அச்சுறுத்தலை உருவாக்கி அரபு நாடுகளுக்கு கோடிக்கணக்கான டொலர்களுக்கு போர்த்தளபாடங்களை விற்று இலாபம் திரட்டினர்.

பாலஸ்தீனியர்கள், ஜோர்தானியர்கள், ஈராக்கியர்கள், லிபியர்கள், லெபனானியர்கள், சிரியர்கள், சூடானியர்கள் என அரபு - முஸ்லிம் மக்களை ஆயிரக்கணக்கில் இஸ்ரேல் மூலமாகவும் தாமே நேரடியாகவும் கொன்றொழித்தனர். பொருளாதார தடைகள் மூலம் அம் மக்களை கூட்டாகத் தண்டித்தனர். அரபு நாடுகளின் மக்களை தமது இராணுவ இலக்காக்கியுள்ளனர். வளைகுடா யுத்தத்தில் இரண்டு லட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். யுத்தத்தின் பின்விளைவுகளால் பத்து லட்சம் ஈராக்கியர்கள் மரணித்துள்ளனர். இதில் அரைவாசிப் பேர் சிறுவர்களாகும்.

முஸ்லீம் மக்களின் அரசியல் எதிர்ப்புக்களை "இஸ்லாமிய அடிப்படைவாதம்" என எதிர்மறை அர்த்தத்தில் கருத்தாக்கம் செய்து, முஸ்லிம் சமூகத்தை உலக பொது நீரோட்டத்திலிருந்து ஓரங்கட்டும் வகையில் தமது செய்தி ஊடகங்கள் மூலம் உலகெங்கும் பிரச்சாரப்படுத்தினர். இப்படியாக முஸ்லிம்கள் பற்றிய எதிர்மறை சித்தாந்தத்தை உலக அளவில் ஏற்படுத்தி விடுவதில் கணிசமாக வெற்றியும் கண்டுள்ளனர்.

மறுபுறம், வளைகுடா யுத்தத்தின் போது, அமெரிக்கப் படைகள் சவுதி அரேபியாவில் இரண்டு வருட காலத்திற்கு தளமமைக்கும் அமெரிக்காவின் நிர்ப்பந்தந்திற்கு சவுதி இணங்கியது. இதுவரையில் எந்த அந்நிய படைகளும் கால் பதித்திராத சவுதி மண்ணில் நம்பிக்கையின் அடிப்படையில், வாக்குறுதியின் அடிப்படையில் தளமமைக்க இடமளிக்கப்பட்டது. ஆனால் இரண்டு வருடங்கள் கடந்த பின்னரும் அமெரிக்கா வெளியேறவில்லை. இந்த வாக்கு மீறலை சுதந்திர உணர்வுடைய அரபு - முஸ்லீம்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் அமெரிக்காவின் துரோகத் தனங்களை பல்வேறு வடிவங்களில் எதிர்க்கத் தொடங்கினர்.

இவ்வெதிர்ப்புகளுக்குக் காரணம், தமது துரோகத்தனங்கள், வாக்குமீறல்கள், மோசடிகள், ஆக்கிரமிப்புகள் என்பவற்றை உலகுக்கும் சொந்த மக்களுக்கும் மறைத்துவிட்டு, "இஸ்லாமிய பயங்கரவாதத்தை" இல்லா தொழிப்போம் என அமெரிக்காவும் அதன் மேற்குலக பங்காளிகளும் அறைகூவல் விடுத்துள்ளனர். மேலும் மேலும் பல்வேறு வடிவங்களில் அத்துமீறல்களையும் அழித்தொழிப்புகளையும் அரபு முஸ்லிம்கள் மீது மேற்கொள்கின்றனர்.

இவற்றின் எதிர்விளைவுகளோ இவர்களது அடக்குமுறை அரசியலை திக்குமுக்காடச் செய்யுமளவுக்கு ஓர்மத்துடன் வெளிப்படுகின்றன. "இது ஏன் இவ்வாறு நிகழ்கிறது? இத்தனை ஓர்மமான எதிர்ப்பு அரசியலின் ஊற்றுமூலம்தான் என்ன?" என இவர்கள் பரிசீலிக்க மறுக்கின்றனர். தமது பொய்மைகள், துரோகத்தனங்கள், ஆதிக்கங்கள் ஆகியவற்றையெல்லாம் திரும்பிப் பார்க்காது, அவற்றை சாதனைகள் எனவும் இராஜதந்திரம் எனவும் கருதிக் கொண்டு அரபு - முஸ்லிம்களை மேற்குலகு தமது பாணியில் தொடர்ந்து அடக்க முயலுமாயின் அந்த எதிர் விளைவுகளை உலகம் கொள்ளாது.

உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான தாக்குதலுக்குப் பின்னாலுள்ள அரசியல் காரணங்களைப் புறக்கணித்துவிட்டு "பயங்கரவாதத்துக்கு பதிலடி" என்றுதான் அமெரிக்காவும் அதன் பங்காளி நாடுகளும் சார்புநாடுகளும் குமுறிக் கொண்டிருக்கின்றனர்.

1. பாலஸ்தீனியரை நசுக்கும் சியோனிச இஸ்ரேலுக்கு பெருமளவு இராணுவ, நிதி மற்றும் இன்ன பிற உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது. ஒஸ்லோ ஒப்பந்தத்தின் மூலம் பாலஸ்தீனியர்களின் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு பாலஸ்தீன பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கான திட்டங்களை இஸ்ரேல் வகுத்தது. எட்டாண்டுகால ஒப்பந்தத்தினால் தாம் மோசடிசெய்யப்பட்டு விட்டதை கண்டுகொண்ட பாலஸ்தீன மக்கள் ஆவேச-

(தொடர்ச்சி 10ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம் மண்ணும் செயற்கை வரட்சியும்!

மூன்றாமுலகில் வரட்சி என்பது ஏகாதிபத்திய பொருளாதர கொள்கையின் எதிர்வினையாகும். இந்த நச்சு சுழலில் இன்று சிறிலங்காவும் சிக்குண்டுள்ளது. சிறிலங்கா பிரதேசங்களில் பெரும் வரட்சி காரணமாக, தண்ணீர் பஞ்சம், விவசாயத்தில் வீழ்ச்சி, மின்சார வெட்டு என மக்கள் திண்டாடுகின்றனர்.

தமிழீழத்தின் நிலையோ இதைவிட மோசமாயுள்ளது. சிங்கள அரசு நம் மண்மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் அழித்தொழிப்பின் ஒரு வடிவமாக செயற்கை வரட்சி, வறுமை, பிணிக்கொடுமை என்பன நம் மக்களை நாளாந்தம் அரித்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

முதலாவதாக, நமது விவசாயத்திற்கு இயற்கையாகக் கிடைத்து வந்த நீர்வளம் பாரிய மகாவலி திட்டங்கள் போன்றவற்றால் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களுக்கும் பல்தேசிய கொம்பனிகளின் பாரிய விவாசாயத் திட்டங்களுக்கும் திருப்பி விடப்பட்டுள்ளது. ஏற்கனவே வளமான விவசாய நிலங்கள் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டன.

பாதுகாப்புக் காரணங்கள் என்ற பெயரில், ஏராளமான தமிழீழ வீதியோரக் காடுகள் அழிக்கப்பட்டதன் காரணமாக, நமது பகுதியில் மழைவீழ்ச்சி பாதிக்கப்பட்டது. இதனால் வானம் பார்த்த விவசாய உற்பத்தி நிலங்கள் வரண்டு போயின. இருபது வருட தொடர்ச்சியான நில, கடல் ஆக்கிரமிப்புக் காரணமாகவும், திறந்தவெளிப் படுகொலைகள் காரணமாகவும், நமது பாரம்பரிய விவசாயம், மீன்பிடி, மந்தை வளர்ப்புப் போன்ற அடிப்படையான உற்பத்தித் துறைகள் மிகப்பெருமளவில் கைவிடப்பட்டுள்ளன.

வளமிக்க விவசாய நிலங்கள் எதிரியினால் கண்ணிவெடி வயல்களாக்கப் பட்டுள்ளதும், நாளாந்தம் நம்மீது ஏவப்படும் எறிகணைகளின் நச்சும் நமது மண், நீர் வளத்தை பாதிக்கிறது.

இவற்றைவிட, தமிழீழமெங்கும் அரசினால் இரு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத்தடை, போக்கு-



வரத்துத்தடை என்பன எஞ்சிய நமது சுயஉற்பத்தி முறைகள் மற்றும் வினியோக முறைகளை மோசமாகச் சிதைத்துள்ளது. ஆக தமிழீழத்தில் வரட்சி, வறுமை, தொழில் வாய்ப்பின்மை என்பது எதிரிகளால் நமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நன்கு திட்டமிட்ட செயற்கை அம்சங்களாகும். செயற்கை வரட்சி, செயற்கை வறுமை, செயற்கைப் பொருளாதார நெருக்கடியாகும்.

இன்றைய வரட்சி பற்றியும் மின்சக்திப் பற்றாக்குறை பற்றியும் சிங்கள தேசமெங்கும் பேசுபொருளாகி உள்ளது. நாம் மின்சாரம் இன்றிக் குப்பி விளக்குப் புகையின் கீழ் எத்தனை வருடங்கள் அவதியுற்று வருகிறோம் என்பதை இவர்கள் எண்ணிப் பார்த்திருப்பார்களா? மருந்துப் பொருட் தடையினால் செயற்கையாக நம்மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட பிணிகள் பற்றி சிந்தித்திருப்பார்களா? இன்று சிங்கள மாவட்டங்களில் நிலவும் வரட்சி மற்றும் வறுமை, பிணிகளை விடவும் எத்தனை மடங்கு மோசமான நமது மண்ணில் நிலவுகின்றது என்பதாவது இவர்களுக்குத் தெரியுமா? 1994 இல் சந்திரிகா அனுப்பி வைத்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தூதுக்குழு... "ஆ.. அப்படியா, பொருளாதாரத் தடை காரணமாக இப்படியும் வாழ்ந்தீர்களா?" ... என ஆச்சரியத்தால் வாய் பிளந்தார்களாம். அதற்குப் பின்வந்த ஏழுவருடங்கள் அதே சந்திரிகா ஆட்சிமுறையினால் அதனைவிடப் பன்மடங்கு மோசமான கேடுகளை ஏற்படுத்தியிருப்பதை சிங்கள தேசம் அறியுமா?

ஆக இயற்கை எவருக்கும் துரோகம் செய்யாது. அவ்வாறு செய்திருந்தால் இத்தனை கோடி வருடங்கள் மனித குலம் நிலைத்திருக்க முடியாது. ஆனால் நமக்கு இழைக்கப்பட்டுள்ளதோ மனித துரோகம்.

¨ கமலன்

## தமிழீழ...10ம் பக்க தொடர்

வாதப்படுத்த வேண்டும். யாழைக் கைப்பற்ற மட்டும் என்றோ, அல்லது தமிழீழம் அமையும் வரைக்கும் என்றோ முஸ்லீம்களின் மீள்வருகைக்கு முன்னிபந்தனை வைப்பது நியாயமற்றது.

அடுத்ததாக, இதர விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள முஸ்லீம்களின் பாரம்பரிய வாழிடங்களில் வந்து குடியேறும் படியும் அவர்கள் வழிவழியாகச் செய்து வந்த தொழில்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் படியும் அவ்வாறான தொடக்கத்திற்கான ஆரம்ப ஏற்பாடுகளையும் நாம் செய்து கொடுப்பதை ஒரு ஆரம்பமாகக் கொள்ள வேண்டும்.

அன்றாடம் முஸ்லீம்களின் மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் அச்சுறுத்தல்கள், உற்பத்திச் சாதனங்கள் சேதப்படுத்தல் மற்றும் பறிப்புகள் போன்றவை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

முஸ்லீம்மக்களை அரசியல்ரீதியிலோ, சமூக அளவிலோ பிரதிநிதித்துவப் படுத்துபவர்களுடன் இருசமூகங்களினதும் உடனடி மற்றும் நீண்டகால ஒற்றுமைகுறித்துகாத்திரமானகலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆரோக்கியமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறாக, நமது ஒருகட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் அடுத்தடுத்த முன்னேற்றங்களுக்கு அத்திவாரமாகட்டும்.

¨ விஜி

## மீண்டும்... (முன்பக்க தொடர்ச்சி)

ரிகா அரசு தனது நோக்கத்தை அடைந்துவிட முயல்கின்றது.

யாழ்ப்பாணம் நோக்கியும் அதனைச் சூழவும் பாரிய படைக்குவிப்புகளைச் செய்து வரும் அரசு, மட்டக்களப்பு பகுதியில் முற்றான மீன்பிடித்தடையை பிரகடனம் செய்துள்ளது. நமது மண்ணை ஆக்கிரமித்தது மட்டுமன்றி, நமது மக்களின் தொழில் செய்யும் உரிமையையும் உண்பதற்கான வழிமுறையையும் சிங்கள அரசு அடைத்துள்ளது. மனிதஉரிமை மீறல், யுத்தக்குற்றம் ஆகிய இரண்டையும் சமகாலத்தில் அது மேற்கொண்டுள்ளது.

எதிரியின் எதிர்காலம் என்பது தோல்வியின் வரலாறுதான். நமது விடுதலைப் போராட்டம் யுத்த முனையில் தொடர் வெற்றிகளை ஈட்டுவது என்பது உறுதி. அந்த வெற்றிகள் பலதளங்களில் மேலும் பல வெற்றிகளை பெறும் வகையில் பயன்படுத்துவோம். போர் நடவடிக்கைகள் ஒரு பகுதியில் நடைபெறுகின்றது எனின், அதனைத் தொடர்ந்து வரும் காலத்தில் விடுதலைப் போராட்டத்தைப் பலப்படுத்த மேற்கொள்ளும் உள்ளர்ந்த அரசியல் தயாரிப்புகள், யுத்த அழிவுகளால் பாதிக்கப்படப் போகும் நமது மக்களின் புனர்வாழ்விற்கு அவசியமான தயாரிப்புகளை தேசிய சக்திகள், வெகுசன அமைப்புகள், மற்றும் நீதியின் பக்கம் நிற்கும் தொண்டர் அமைப்புகள் என்பன இணைந்து மேற்கொள்வது அவசியம். போர்ச்சூழலில் எதிரிகளின் துப்பாக்கிகளுக்கு வெறி அதிகம் என்பதால் நமது தயாரிப்புகள் எதிரிகளின் கண்களுக்குப்படாது உள்ளார்ந்து நடைபெற வேண்டும் என்பதை அறிவோம். அத்துடன் சிறிலங்காவில் தற்போது அரசுக்கு எதிராக ஏற்பட்டு வரும் உணர்வுகளையும் அழுத்தங்களையும் சரியான அர்த்தத்தில் பயன்படுத்திக் கொள்வோம்.

நீண்ட கால அடிப்படையில் கட்டங் கட்டமாக நமக்குப் பல வெற்றிகள் அவற்றை திடப்படுத்தல், மீண்டும் வெற்றிகள் என்பதுதான் வருங்கால நிகழ்ச்சிப் போக்காகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரபுலகின்.... (8ம் பக்க தொடர்ச்சி)

முற்று வீதிக்கிறங்கினர். 2000ஆம் ஆண்டு செப்ரெம்பரில் மேற்காசியாவை அதிரவைத்துக் கொண்டிருந்த இந்திபாதா மக்கள் போராட்டங்களை தண்டிக்கும் வகையில் 700 பாலஸ்தீனியர்கள் சிறுவர்கள், பாலகர்கள், பெண்கள், முதியவர்கள் அடங்கலாகக் கொல்லப்பட்டனர். இது பற்றிய விபரங்கள் உலகத்தாருக்கு தெரியவரா வ ண ் ண ம ் ஏகாதிபத்திய பயங்கரவாத ஊடகங்களால் தணிக்கை செய்யப்பட்டன.

2. ஒஸ்லோ ஒப்பந்தத்திற்கு மாறாக பாலஸ்தீன பிரதேசங்கள் மீதும் பாலஸ்தீன நிழல் அரசின் தலைமைக் காரியாலயங்கள் மீதும் இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடாத்தின. அரபாத்தின் காரியாலயம் சிதைக்கப்பட்டது. இஸ்ரேலிய டாங்கிகள் பாலஸ்தீன பிரதேசங்களை ஆக்கிரமித்து தமது நிலைகளை உருவாக்கின.

3. பாலஸ்தீனத்தின் போர்க்குணாம்சமிக்க அரசியல் தலைவர்களை இலக்குவைத்து வேட்டையாடும் திட்டத்தை அமெரிக்காவும் இஸ்ரேலும் வகுத்தன. PLO வில் அங்கம் வகிக்கும் PLFP அமைப்பின் தலைவரும் சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வழங்கி வந்தவருமான அபு அலி முஸ்தபாவை 27. 08. 01 அன்று இஸ்ரேல் படுகொலை செய்தது. அவரைத் தொடர்ந்து பாலஸ்தீன உளவு நிறுவனத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரை படுகொலை செய்தது.

4. டர்பனில் நடைபெற்ற இனவெறிக் கெதிரான ஐ. நா. மாநாட்டில் சியோனிசத்திற் கெதிரான பிரகடனத்தை எதிர்த்து அமெரிக்காவும் இஸ்ரேலும் வெளியேறின.

உலகின் முன்னிலையில் சியோனிச இஸ்ரேலை அமெரிக்கா ஆதரித்து நின்றது. இஸ்ரேலின் ஓநாய் பற்களுக்கிடையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள ஜீவ மரணப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்களுக்கும் மேற்காசியாவின் அரபு - முஸ்லிம் நாடுகளுக்கும் துரோகமிழைத்தது.

அமெரிக்கா இஸ்ரேலைத் தாங்கி நிற்கும் வரையில் பாலஸ்தீனத்துக்கும் மேற்காசியாவிற்கும் விடுதலையில்லை எனும் ஆழமான அரசியல் புரிதல் நமக்கு அவசியமாகும். அமெரிக்காவின் எல்லை கடந்த பயங்கரவாதமே அதனை இலக்கு வைத்து நடைபெறும் பல்வேறு தாக்குதல்களுக்கான ஊற்று மூலமாகும்.

அமெரிக்கா மீதான தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா என வெள்ளை திமிர் கொண்ட நாடுகளெங்கும் முஸ்லிம்கள் அச்சுறுத்தலுக் குள்ளாக்கப்பட்டனர். "முஸ்லிம் பயங்கரவாதம்" "இஸ்லாமிய அடிப்படைவாதம்" எனும் சித்தாந்த பிரச்சாரத்தின் மூலம் இந்த நாடுகளின் மக்கள் எவ்வாறு ஒரு மாயைக்குள் வைக்கப்பட்டுள்ளனர் என்பதைக் காண முடிகின்றது. இவ்வாறாக முஸ்லிம் மக்களை உலக பொது உணர்விலிருந்து வெள்ளை ஆதிக்க சக்திகள் ஓரங்கட்டி வருவது தீவிரப்பட்டுள்ளது.

இதன் எதிர்வினையாக, அரபு - முஸ்லிம் மக்களையும் உலகெங்குமுள்ள முஸ்லிம் மக்களையும் முஸ்லிம்கள் எனும் பொது உணர்வுப் புள்ளியில் இணைப்பதாயுள்ளது. ஒரு புதியவகை சர்வதேசிய உணர்வின் தோற்றத்திற்கு இது இட்டுச் செல்லும் பண்பையும் கொண்டுள்ளது.

தம்மை ஆக்கிரமிப்பவர்களை, ஏமாற்றியவர்களை தண்டிப்பதையும் தமது விடுதலைப் போராட்டத்தையும் முஸ்லிம்கள் ஜிகாத் எனலாம், புனிதப் போர் எனலாம். ஆனால் அது மார்க்சிய சொல்லாடலில் ஆக்கிரமிப்பிற் கெதிரான அடக்கப்பட்டோரின் விடுதலைப் போராட்டமாகும்.

நமது காலங்களில், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டச் சக்திகள் என்ற விதத்தில் அரபு - முஸ்லிம் மக்களை நமது உற்ற தோழமைச் சக்தியாக வரித்துக் கொள்வோம். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நமது ஒருமைப்பாடும் சகோதரத்துவமும் அரபு - முஸ்லிம்களுக் குரியதாகட்டும்.

¨ சுபத்திரா

## தமிழீழமும்... (6ம்பக்க தொடர்ச்சி)

சிந்திப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? முஸ்லீம் கொங்கிரசின் தோற்றத்திற்கு அதிகம் காரணமாக அமைந்தது சிங்கள இனவாதம் எனின், முஸ்லீம் கொங்கிரசின் வளர்ச்சிக்கு முற்றிலும் காரணமாகியது தமிழ் இனவாதம். தமிழ் இனவாதப் போக்கு முஸ்லீம்களைத் துரத்தியடித்தாலும், படுகொலைகளை புரிந்தாலும் முஸ்லீம்கள் நமது காலடியில் கிடக்க வேண்டும் என்று விடுதலைப் போராளிகளாகிய நாம் எதிர்பார்ப்பதில் எந்தவகையில் நியாயம்? இவ்வழிமுறைகளில் நம்மிரு தேசங்களையும் ஒற்றுமைப்படுத்திவிட முடியாது. கடந்தகால வரலாற்றுத் தவறுகளை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதும் அவ்வாறாக இனியொரு போதும் நடைபெறாது என உறுதிப்படுத்துவதும், முடிந்து போனவற்றிற்கு பரிகாரம் காண்பதும் நமது தரப்பில் செய்யப்படும் போதுதான் மேற்கண்ட விமர்சனங்களைச் செய்யும் தார்மீக உரிமையை உடையவர்களாகின்றோம்.

சமகாலத்தில், கரிகாலனின் கூற்றுக்கள் சற்று முன்னேற்றகரமானதாக உள்ளதைக் காண்கின்றோம். இப்படியான முன்னேற்றங்கள் வெறுமனே சடுதியாக ஏற்பட்டதல்ல. தமிழ்த் தேசத்தின் முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகள் மற்றும் மக்கள் மேற்கொண்டு வரும் அழுத்தங்கள் இதற்கு ஒரு முக்கிய காரணம். நடைமுறையில், விடுதலைப்புலிகள் அடைந்து வரும் வெற்றிகள், போராட்டத்தில் இறுதிக்கட்டம் நோக்கி நெருங்குவதால் பல்வேறு சக்திகளின் இணைவு அவசியம் என்பதை உணர்ந்துள்ளமை. ஏற்கனவே விட்ட தவறுகளினால் ஏற்பட்ட இழப்புக்களை சரி செய்யும் மனோபாவம் இப்போது அதிகம் உள்ளது. சிங்கள இனவாதம் முஸ்லீம் மக்களின் மீதும் நேரடியாகக் குறிவைத்துப் பாய்ந்துள்ளமை போன்றவையும், பிரதானமாக முஸ்லீம் மக்களின் சகிப்புத் தன்மையும் இதில் காத்திரமான பாத்திரம் ஆற்றியுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அவர்களின் குறிப்பான பங்களிப்புகளும் இந்த முன்னேற்றங்களுக்குக் காரணங்கள் எனக் கொள்ளலாம்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுமையாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வரும் போது அங்குள்ள முஸ்ஸீம்கள் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன? என்ற செய்தியாளரின் கேள்விக்கு.. . . . *ஸ்ரீகிழக்கு மாணத்திலுள்ள முஸ்லீம் மக்கள் தமிழ் ஈழத்தில் வாழும் தனி இனக்குழு, அவர்கள் தனியான கலாசாரத்தை கொண்டவர்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அவர்கள் தனித்துவமாக வாழ்வதற்கான சகல உரித்தும் இருக்கிறது. பேசுகின்ற மொழியால் ஒன்று பட்டிருக்கிறோம். இது ஒரு பலமான இணைப்பு. அவர்களையும் சிறிலங்கா அரசினதும் படைகளினதும் அடக்கு முறைகளிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக தனித்துவமாக தமிழ் ஈழத்தில் வாழும் நிலையை ஏற்படுத்துவோம். அவர்கள் எமது போராட்டத்திற்கு நேரடியாக பங்களிப்பு செய்யாவிட்டாலும் பக்கபலமாக இருக்க வேண்டும். அதையே நாம் வரவேற்கின்றோம்.ஜி* என்கிறார் கரிகாலன். இப்பதிலில் சில முன்னேற்றமான அம்சங்கள் இருந்தும் சில வினாக்கள் இங்கும் தவிர்க்க முடியாமல் மேலெழுகின்றது. மேலும் முன்னேற்றங்களை நமது போராட்டம் அடையவேண்டும் நோக்கில் நமது சுட்டிக்காட்டல் அமைகின்றது.

முஸ்லீம்களை சிறிலங்கா அரசினதும் படைகளினதும் அடக்குமுறைகளில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற அவரது கருத்தானது அடக்கப்படும் ஒரு சமூகம் தனது அவசியதில் இருந்து பொருத்தமான போராட்ட வடிவங்களை தானே மேற்கொள்ளும் என்ற தனித்துவத்தை நிராகரிக்கும் நிலைக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடாது. மேலும் அவர்களை நாம் மீட்டெடுப்பது எனும் கூற்றில் அவர்கள் ஆயுதம் ஏந்துதிச் சுயமாகப் போராடும் உரிமை கொண்டவர்கள் என்பதை இட்டு ஒரு மறுப்புத் தொனிக்கின்றது. அதனை உறுதிப்படுத்துவதாக, அடுத்துவரும் வாக்கியங்கள் அமைகின்றன... அவர்கள் எமது போராட்டத்திற்கு நேரடியாக பங்களிப்பு செய்யாவிட்டாலும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்பதும், அதையே நாம் வலியுறுத்துகின்றோம் என்ற அழுத்தமும் ஒரு எதிர்மறை பண்பைக் கொண்டுள்ளது. உள்ளார்ந்த நம்பிக்கையீனம் தொனிக்கின்றது. ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை நம்பாமை என்பது ஒரு பக்கப் பிரச்சனை இல்லை. இருபக்கமும் பொறுப்பேற்க வேண்டிய விடயமாகும்.

அதாவது விடுதலைப் படையில் முஸ்லீம்கள் அவசியமில்லை என்ற ஒதுக்கி வைப்பு கரிகாலன் கூற்றில் தொனிக்கின்றது. தமிழீழக் குடியரசின் அதிகாரத்தைப் பிரதானமாகத் தீர்மானிக்கப் போகின்ற ஆயுதப்படைகளும், காவல் துறைகளும் முற்றிலும் தமிழ்ப்படைகளாக இருக்கப் போகின்றனவா? அதுவும் இரு சமூகங்களுக்கிடையில் ஆழமான நிலவும் தப்பெண்ணங்களும் சந்தேகங்களும் களையப்படுவதற்கு காத்திரமான நடவடிக்கைகளோ, சூழலோ உருவாக்கப்பட்டிராத நிலையில் இது எங்கு நோக்கி நிலைமைகளை இட்டுச் செல்லும் என்பதற்கு நம்முன்னுள்ள வரலாறு சான்றாகிறது.

ஆக, தமிழீழ விடுதலைப் போராட்டமானது எதிர்கொண்டுள்ள முஸ்லீம் மக்கள் பற்றிய பிரச்சனையை தீர்ப்பதற்கு இன்னும் ஆழமான முயற்சிகளை வேண்டி நிற்கின்றது. எவ்வாறாயினும் தற்போது ஏற்பட்டு வரும் முன்னேகரமான மாற்றங்களை வரவேற்போம். புதிய தொடக்கப் புள்ளிகளாகக் கொள்வோம்.

முதலாவதாக, வடக்கு முஸ்லீம்கள் யாழ்ப்பாணம் போவதற்கு உரித்துடையவர்கள். இதனை விடுதலைப் புலிகள் பகிரங்கமாகவும் எந்தவித நீக்குப் போக்கு அற்றும் உத்திர-

(தொடர்ச்சி 9ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அடிப்படைப் பிரிவினர்.... (4ம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கியிருக்கும் குடும்பம், தாய்மை, நல்மனைவி, தீட்டு, அச்சம் - மடம் - நாணம் எனும் பெண்மைச் சட்டகம் மற்றும் அழகு பற்றின ஐதீகங்கள் ஆகியவற்றை போராளிப் பெண்களளவில் உடைத்துள்ளது. பெண்கள் மத்தியில் விடுதலை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. (இது போராளிப் பெண்கள் வட்டத்தில் மாத்திரமல்ல சமூகத்திலும் பெண்களது வாழ்வில் பிரதிபலிக்கத்தான் செய்கிறது). துணிகரம், சுதந்திரமான நடமாட்டம், ஆளுமை, சமூக தலைமைத்துவம், பாலியல் தெரிவு ஆகியன பெண்களிடம் உருவாகியுள்ளது. மறுபுறம் தாம் சார்ந்த அரசியல் அமைப்பில் ஆண்களின் அதிகாரத்துவத்துடன் மோதிக் கொண்டிருக்கவும், ஒவ்வொரு கணமும் ஆணாதிக்க அதிகாரத்துவத்தை எதிர்கொள்ளவும் வேண்டிய நிலை பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படியாக சமூகத்தில் இதுவரை நிலவி வந்த பௌதீக - சித்தாந்த நிறுவனங்களில் தளர்வுகள் ஏற்பட்டு வரும் அதேநேரம், புதிய வடிவிலான அடக்குமுறைகளை பெண்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இங்கு நமது அக்கறைகள் எவ்வாறு இந்த முன்னேறின மாற்றங்களை சமூக அளவில் உறுதிப்படுத்தி வளர்த்தெடுப்பது, புதிய வடிவிலான ஆணாதிக்க வடிவங்களை எதிர்த்து முறியடிப்பது, பெண்களின் சமூக விடுதலையை ஸ்தாபிப்பது என்பதாகும்.

பெண்களின் விடுதலைக்கு சாதகமாக தற்ோது உருவாகியிருக்கும் அம்சங்களான குடும்ப தலைமைத்துவம், ஆணாதிக்க குடும்ப அமைப்பில் காணப்படும் சிதைவு, சமூக உழைப்பிலும் சமூக நடவடிக்கையிலும் பெண்களின் அதிகளவு பங்கேற்பு, சமூக சம்பிரதாயங்களிலான இறுக்கம் தளர்வுறுவது, பாலியல் அடக்குமுறைகளில் இருந்து பெண்கள் தம்மை நெகிழ்த்துக் கொண்டிருப்பது யாவும் பெரிதும் சமூக நிலைமைகளின் விளைவாகும். இவை திட்டமிட்ட விழிப்புணர்வு மற்றும் பெண்ணுரிமை போராட்டத்தினால் உருவானவையல்ல. அவ்வகையில் பெண்களை நசுக்கி வந்த சித்தாந்தம் இன்னும் முறியடிக்கப்படாதிருப்பதுடன் அது புதியவகை அடக்குமுறைகளுக்கு வித்திடுவதாயுமுள்ளது. தற்பொழுது ஆணாதிக்க சித்தாந்தத்தின் அழுத்தம் அதிகமாயில்லாதிருந்தாலும் நிலைமைகள் மாறுகையில் மீளவும் இது பெண்களை நசுக்குவதில் தனது அழுத்தத்தை தீவிரப்படுத்துவதுடன் புதிய வடிவிலான ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கேற்பவும் விரிவாக்கம் பெறும்.

எனவே தற்போது உருவாகியிருக்கும் சூழ்நிலையை பயன்படுத்தி பெண்களின் விடுதலைக்கான விழிப்புணர்வு தீவிரப்படுத்தப்பட வேண்டும். நமது சமூக உருவாக்கத்தில் கூர்மையடைந்துவரும் முரண்பாடுகளில் ஒன்றாக சிலசந்தர்ப்பங்களில் தேசிய முரண்பாட்டுக்கு அக்கம்பக்கமாக கூர்மையுடையதாக ஆணாதிக்க முரண்பாடு வெளிப்படுகிறது. அவ்வகையில் இதில் உரிய கவனம் செலுத்தி பெண்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக தேசமெங்கும் பெண்களின் உரிமைக்கான அமைப்புகள், பெண்ணிய அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் சுயாதீனமான செயற்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவற்றை முன்கையெடுத்து செயற்படுத்துவது பெண்விடுதலை நாடும் பெண்களினதும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஆண்களினதும் போராட்ட தரப்பினதும் கடமையாகும்.

அமையும் தமிழீழ குடியரசானது பெண்களின் விடுதலைக்கான திட்டங்களை முன்னெடுக்கும் பெண்ணிய நோக்குடைய அரசாகவும் அமைய வேண்டுமாயின், பெண்களின் உரிமைகளுக்காக செயற்பட்டுவரும், பெண்விடுதலை போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பெண்களின் விரிவான கூட்டமைப்பு அவ்வரசில் அங்கம் வகிக்க வேண்டும். இப்பெண்கள் கூட்டமைப்பினால் பெண்களுக்காக உருவாக்கப்படும் அரச கொள்கையை தமிழீழ குடியரசு அமுலாக்கிட வேண்டும். அவ்வகையில் தமிழீழ அரசாங்கமானது பெண்களின் நலன்களை நடைமுறையில் தடையற்று முன்னெடுக்க வேண்டுமானால் அரசாட்சியில் ஐம்பது வீதமான பெண்கள் பங்கேற்பது உறுதிபடுத்தப்பட வேண்டும். தேசத்தை மீட்க பெண்கள் ஆயுதமேந்தி போராட முடியுமாயின், சமூக உழைப்பிலும் குடும்ப உழைப்பிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்த முடியுமாயின் அரசாட்சியில் பங்கேற்பதற்கும் தேசத்தை ஆள்வதற்கும் நமது பெண்களுக்கு பூரண தகைமையுண்டு என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. எனவே இவ்வாறான ஒரு எதிர்காலத்தை படைப்பதை நோக்கி தற்போதைய சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

"ஒரு சமூகத்தின் பண்பை, அச்சமூகத்தில் பெண்கள் வகிக்கும் நிலையால் அளவிட முடியும்" என்கிறார் 18ம் நூற்றாண்டின் சோசலிசவாதி ஷார்ல் பூரியே. தேசத்தின் சரிபாதியிலும்விட அதிக எண்ணிக்கையிலிருக்கும் பெண்களின் நலன்களை, தேசத்தை உயிரியல் சார்ந்து மறு உற்பத்தி செய்யும் பெண்களின் நலன்களை பாதுகாப்பதே உண்மையான தேச அரசாகும். அவ்வாறில்லாத அரசு தன்னை தேச அரசென்று கூறிக்கொள்ளும் தார்மீகத் தகுதியை இழந்து விடுகிறது. தமிழீழ குடியரசானது பெண்ணிய விழுமியங்களால் தன்னை புடமிடுவதன் மூலம் பெண்களின் உரிமைகளை முன்னெடுக்கும் அரசாக செயற்படச் செய்வோம்.

¨ அங்கவை

## தென்னாசியாவிலும்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏகாதிபத்திய அரசுகள் பொருளாதார, அரசியல், அறிவுத்துறை ரீதியாக தென்னாசியாவை நேரடியாக விழுங்கி வருகிறன. இப்போது அவற்றின் நேரடி யுத்த நோக்கங்களுக்கும் இடமளிப் போமாயிருந்தால் முற்றிலும் ஏகாதிபத்திய நலன்களை நிறைவேற்றும் நிலைக்கு தென்னாசிய மக்களான நாம் தள்ளப்பட்டு விடுவோம். தென்னாசியாவில் இராணுவ தளமமைத்திடும் நோக்கம் ஏற்கனவே அமெரிக்காவுக்கு இருந்து வருகிறது. தற்போதைய சந்தர்ப்பத்தை அது பயன்படுத்திக் கொள்ள முயல்கிறது.

தென்னாசியா என்பது இப்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்குரிய பிரதேசமாகும். இதை ஏபாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, மனித அழிப்பு நோக்கங்களுக்கு தாரை வார்ப்பதற்கு எந்த சக்திக்கும் உரிமையில்லை. நமது பிராந்தியத்தில் ஏகாதிபத்திய தளங்கள் அமைக்கப்படும் எனின், யுத்த நெருப்பானது இப்பிராந்தியம் எங்கு விரைவில் பற்றிக் கொள்ளும். எனவே இப்பிராந்தியத்தில் எந்தவொரு நாட்டிலும் ஏகாதிபத்திய அரசுகள் இராணுவத் தளம் அமைக்க இடமளிக்காதிருப்போம். இதற்கான கடுமையான எதிர்ப்புகள் பாகிஸ்தானில் தோன்றிவிட்டது. இந்தியாவில் எதிர்ப்புகள் கருக் கொண்டு வருகின்றது. அவ்வாறே, தென்னாசிய மக்களின் இறைமைக்கு எதிராக இந்திய, பாகிஸ்தானிய அரசுகள் செயற்படுவதை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களில் நமது தீவிலுள்ள மக்களும் இணைந்து கொள்வோம்.

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வரும் அமெரிக்கா தென்னாசியாவிற்குள் தனது முப்படைகளுடன் நுழைவது அடிப்படையில் நமது போராட்டத்திற்கும் ஆபத்தானதாகும். பாகிஸ்தானில் அல்லது இந்தியாவில் ஏகாதிபத்தியம் தளமமைக்குமானால் அதற்கு துணை வழங்கல்களை பெறுவதற்காக திருகோணமலை, கொழும்பு துறைமுகங்களையும் கட்டுநாயக்க விமானத்தளத்தையும் பயன்படுத்திக்கொள்ள முயலும் ஆபத்துள்ளது. இவையாவும் தமிழீழத்தினதும் ஒட்டுமொத்த இலங்கைத் தீவினதும் இறைமைக்கு பெருத்த ஆபத்தாயமையும். எனவே ஏகாதிபத்தியத்தை தென்னாசியப் பிராந்தியத்திற்குள் காலடி வைக்க விடாதிருக்க போராடுவதும் அழுத்தங்களை ஏற்படுத்துவதும் தமிழீழ மக்களான நமதும் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழீழம்

www.thamileelam.org
info@thamileelam.org

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom


# தொடர் வெற்றிகளால் விடுதலையை உறுதிபடுத்துவோம்!

அழித்தொழிப்பு ஒன்றே தமது ஒரே குறிக்கோள் என்பதை சிறிலங்கா அரசின் புதிய ஆட்சிக் கூட்டமைப்பு மிகத் தெளிவாக அறிவித்துவிட்டது. அத்துடன் தாம் கொள்கை ரீதியாக எடுத்த முடிவை செயற்படுத்தவும் தொடங்கிவிட்டார்கள். ஆம்! பாரிய அழித்தொழிப்புப் போருக்கு சிங்கள அரசு தயாராகி விட்டது. முன்னெப்பொழுது மில்லாதவாறு ஒரே வேளையில் தென் தமிழீழத்தையும் வடதமிழீழத்தையும் ஆக்கிரமிப்பது எனும் புதிய போரியல் வழிமுறையை அது வகுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

நடைபெறப்போகும் அடுத்தகட்ட தீர்க்கமான போரில் நம் தேசம் வெற்றிகளை குவிப்பது நமது விடுதலைப் போராட்டத்தினை இன்னுமொரு தீர்மானகரமான கட்டத்திற்குக் கொண்டு செல்லும். எனவே நமது தேசத்தின் ஒட்டுமொத்த ஆற்றலையும் இந்த வெற்றிக்காக குவிப்போம்.

அமெரிக்கா மீதான தாக்குதலுடன் உலகளவில் கொந்தளிப்பான அரசியல் நிலைமை உருவாகியுள்ளது. இதில் அடக்கப்பட்டு வரும் மக்கள் பிரிவினர் மீது உலகில் ஆதிக்க நிலையில் இருப்பவர்கள் ஒன்றுசேர்ந்து யுத்தப் பிரகடனம் செய்யும் நிலைமை மேலெழுந்து வருகிறது. குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் பன்னாட்டு படைகளும் தமது யுத்த தேவைகளுக்காக தென்னாசிய பிராந்தியத்தை தளமாக்கிக் கொள்ள முயல்கின்றனர். அதுமாத்திரமல்ல, தென்னாசிய பிராந்தியம் யுத்தத்தில் சம்பந்தப்படுவது என்பது ஏற்கனவே இப்பிராந்தியத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடியை அதிகரிக்கும் மக்களின் வாழ்நிலையை மேலும் மோசமடையச் செய்யும். எனவே தென்னாசியாவை ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையை நாமனைவரும் கொண்டுள்ளோம். இதற்கான மக்கள் போராட்டங்களுக்கு நமது தேசமும் இதர தேசங்களுடன் இணைந்து யுத்தம் விரிவடைவதற்கு எதிராகச செயற்பட வேண்டும்.

உலகின் கவனம் அனைத்தும் அமெரிக்கா ஆப்கன் மீது விடுத்துவரும் யுத்த அச்சுறுத்தலின் மீதும், மூளப்போகும் பெரும்போர் பற்றிய வாதப்பிரதிவாதங்களிலும், ஒவ்வொரு நாடும் இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ள மேற்கொள்ளும் அகத் தயாரிப்புகளிலும் குவிந்திருப்பதால், சந்திரிகா அரசு பெரும் அட்டூழியங்களை நம்மீது கட்டவிழ்த்துவிட வாய்ப்பு அதிகரித்துள்ளது. இரசாயன ஆயுதங்கள் பரீட்சிக்கப்படலாம். முடிந்தவரையில் நமது பிரச்சாரங்களை சர்வதேச மயப்படுத்தி எதிரியை எச்சரிக்கை நிலையில் வைத்திடுவோம்.

தமிழீழத்தை ஆக்கிரமித்த இந்திய அரசின் கபடத் தனங்களை எதிர்த்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 14வது நினைவு தினத்தை தேசமாக நினைவு கூர்வோம். இந்திய ஆக்கிரமிப்பிற்கெதிரான நம் தேசத்தின் முதலாவது உயிர் அர்ப்பணிப்பு திலீபன் ஆவார். அவரது எதிர்ப்பு போராட்டத்தில் பொதிந்திருந்த அரசியலை நாம் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

தேசத்தின் பெயரால் எதிரிகளினால் படுகொலைக்குள்ளாகும் மக்கள், தம்மை அர்ப்பணிப்பதன் மூலம் விடுதலையை பலப்படுத்துகின்றனர். அவர்களை நினைவு கூர்வது நமது போர்க்குணாம்சத்தை மேலும் புதுப்பிப்பதாயிருப்பதுடன், அதுவே எதிரிக்கெதிரான ஒரு போராட்ட வடிவமாகவும் அரசியல் முன்னெடுப்பாகவும் உள்ளது.

90ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தென்தமிழீழத்தின் மட்டகளப்பில் மண்ணுக்கு வித்தான நம் மக்களை தேசமாக நினைவு கூர்வோம். நமது அஞ்சலிகள் அவர்களுக்கு உரித்தாகட்டும்.

எட்டு பக்கங்களுடன் ஆரம்பித்த தமிழீழம் பத்திரிகையை 28வது இதழுடன் பன்னிரண்டு பக்கங்களாக அதிகரித்துள்ளோம் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். தங்களின் அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், செழுமைப்படுத்தலுக்கான ஆலோசனைகளையும் வழங்குமாறு கோருகிறோம்.

# இந்திய அரசின் ஏகாதிபத்திய விசுவாசம்

அமெரிக்காவில் தாக்குதல் நடந்ததும், ஏதோ தனது தலைநகரம் தாக்கப்பட்டு விட்டது போல் இந்திய அரசு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துள்ளது. ஒருபுறம் அமெரிக்காவுக்கான அனுதாப வார்த்தைகளை சொரிந்தபடியும், மறுபுறம் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்போம் என கூச்சலிட்டுக் கொண்டும் தனது அமெரிக்க பற்றை வெளிப்படுத்தி வருகிறது.

நேரடிப் பாதிப்புக்குள்ளானது அமெரிக்கப் பொருளாதாரமே. அமெரிக்காவுக்கு இதில் நேரடியாக 30 பில்லியன் டொலர்களும் மொத்தமாக 90 பில்லியன் டொலர்களும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டால் அது உலக பொருளாதாரத்தை பாதிக்கும். தென்னாசியாவில் இன்று இந்தியா அமெரிக்காவின் பிரதான முதலீட்டு மையமாக உள்ளது. அமெரிக்கா எதிர்கொண்ட பொருளாதார இழப்பு இந்திய பொருளாதாரத்தையும் உடனடியாக பாதித்துள்ளது. இவ்விரு நாடுகளும் ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்குள் இருந்ததும் கவனிக்கத் தக்கது.

அமெரிக்க பங்குச் சந்தை நான்கு நாட்களுக்கு ஸ்தம்பித்ததுடன் மும்பாய் பங்குச் சந்தையிலும் பெரும் சரிவுகள் ஏற்பட்டன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செப்ரெம்பர் 12ம் திகதி 38 லட்சம் பெறுமதியான பங்குகளை விற்றுள்ளார்கள். எண்ணெய் விலை உயருமானால் இந்தியாவின் இறக்குமதிக்கான செலவீட்டில் 500 கோடி இந்திய ரூபாய்களை அதிகப்படியாக செலவிட நேரிடும். இந்திய ஏற்றுமதி வர்த்தகத்தில் 21வீதம் அமெரிக்காவுக்கான ஏற்றுமதியாகும். இத்தாக்குதலினால் இந்திய ஏற்றுமதியில் 30 கோடி டொலர்கள் வீழ்ச்சி ஏற்படுமெனவும் மதிப்பிடப்படுகிறது. இவை உடனடி மதிப்பீடுகளாகும். எதிர்கால பாதகமான விளைவுகள் இன்னும் அதிகரிக்கலாம்.

அத்துடன், பாகிஸ்தான் அனுசரணை பெற்ற தாலிபான் அரசின் பாதுகாப்பிலிருக்கும் பின்லேடன் சார்ந்தோராலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது இந்தியாவிற்கு பெருத்த பிரச்சனையாகியுள்ளது. தென்னாசிய பிராந்தியத்தில் இந்திய ஆதிக்கம் இதனால் மறைமுகமாக கேள்விக்குள்ளாக்கப் படுகின்றது.

இவ்வகைக் காரணங்களால் இந்தியா அமெரிக்கா மீதான தாக்குதலை தேவைக்கதிகமாக கண்டிக்கிறது. அத்துடன் இந்துத்துவ இந்திய அரசின் இஸ்லாமிய எதிர்ப்பு சித்தாந்தமும் இதில் விரவியுள்ளது. அது மாத்திமல்ல, தாக்குதல் நடாத்தியவர்களின் அடுத்த இலக்கு இந்தியா என்பதையும் வேண்டுமென்றே பிரச்சாரப்படுத்திக் கொள்கிறது. இதன் மூலம் இராணுவ செலவினங்களுக்கான நிதியொதுக்கீட்டை உயர்த்தப் போவதையும் ஏற்கனவே மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியையும் நியாயப்படுத்துகிறது. கூடவே உள்நாட்டில் முஸ்லிம்கள் மீதான தனது அடக்குமுறைகளை, காஷ்மீரத்தை நசுக்குவதை மேலும் தீவிரப்படுத்தப் போவதற்கான சித்தாந்த தயாரிப்பாகவும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறது. இந்திய ஆளுங்குழுமத்தின் இந்துத்துவ பார்ப்பனிய ஊடகங்கள் இச்சித்தாந்த பரப்புரையை மிக ஆவேசத்துடன் மேற்கொண்டு வருகின்றன.

டர்பன் மாநாட்டில் சாதியத்திற்கெதிரான தீர்மானம் எடுக்கப்படாது விடப்பட்டதில், அடக்கப்பட்டோரின் இதயத்தைத் தீய்த்து இந்து - பார்ப்பனிய சக்திகளின் மனதை குளிரப்பண்ணியதில் அமெரிக்காவுக்கும் முக்கிய பங்குண்டு. அதற்கு "நன்றிக்கடன்" நிறைவேற்றவும் வேண்டுமல்லவா? அமெரிக்கா மேற்கொள்ளப் போகும் யுத்தத்திற்கு பூரண ஆதரவு வழங்கப் போவதாகவும் தேவைப்படின் அமெரிக்காவுக்கு இந்தியாவில் தளம் வழங்கப் போவதாகவும் உறுதியளித்துள்ளது.

மொத்தத்தில் இந்திய பிராந்திய ஆதிக்க அரசும், அமெரிக்க ஏகாதிபத்திய அரசும் ஒன்றன் நலனை மற்றது பாதுகாத்துக்கொள்வதில் மேலும் நெருங்கி வந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்